பக்கங்கள் :எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆனி 14 வியாழக்கிழமை (28.06.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 21[illegible]

## இன்னும் 3 அல்லது 4 வாரங்களில் கிழக்கு அரசின் கட்டுப்பாட்டின் கீழ்!

### வாஷிங்ரனில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



வாஷிங்ரன்,ஜூன் 28

எமது இராணுவத்தினர் இன்னும் மூன்று அல்லது நான்கு வாரங்களில் கிழக்கு மாகாணம் முழுவதையும் தமது - அரசின் - கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விடுவர்.

இவ்வாறு இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இங்கு தெரிவித்திருக்கிறார்.

கிழக்கை அரசின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதானது, அரசியல், இராணுவ, சமூக மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக ஓர் உபாயத்தை முன்வைத்து தீர்வு முயற்சியை முன்தள்ளுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதே ஆகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து நிதி உதவி செய்ய ஆதரவு திரட்டும் தமது பிரசாரத்தின் போதே அவர் இவ்வாறு சொன்னார்.

கிழக்கு மாகாணம் முழுவதையும் கைப் பற்றக் கூடிய நிலையில் நாம் இருப்பதால், அமைதிக்கும் அபிவிருத்திக்கும் அடிப்படைப் (08ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் துறைமுகத்தில் நேற்று நான்கு படகுகள் எரிந்து நாசம்

கொழும்பு, ஜூன் 28

திருகோணமலைத் துறைமுகத்தின் அதி உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் அமைந்துள்ள கொட்பே மீன்பிடித்துறைமுகத்தில் தரித்து நின்ற நான்கு றோலர்படகுகள் நேற்று எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்று அதிகாலை சுமார் 1.35 மணியளவில் துறைமுகப்பகுதியில் தரித்து நின்ற றோலர்படகுகளில் நான்கு படகுகளில் திடீரெனத் தீப்பிடித்துக்கொண்டது என்று தெரிவிக்கப்படுகின்றது. தீப்பிடித்த படகுகளை கடற்படையினரும் பொலிஸாரும் அணைக்க முயன்றபோதும் அது கைகூடவில்லை.

எரிந்த படகுகள் மூன்று கோடி ரூபா பெறுமதி எனமதிப்பிடப்பட்டிருக்கிறது.- இவை சிங்கள மீனவர்களுக்குச் சொந்த (08ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சை மீண்டும் ஆரம்பிக்க இரு தரப்புகளுக்கும் அழுத்தம் கொடுக்க இணைத் தலைமைகள் முடிவு

## சட்டம் ஒழுங்கு, மனித உரிமை மீறல் குறித்துக் கவலை

கொழும்பு, ஜூன் 28

இலங்கையில் சட்டம் - ஒழுங்கு மற்றும் மனித உரிமைகள் பேணப்படுதல் மிக மோசமடைந்து வருவது குறித்து பெரும் கவலை வெளியிட்டுள்ள இணைத்தலைமைகள், அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்கும்படி சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் தீர்மானித்திருக்கின்றன.

நேற்றுமுன்தினம் ஒஸ்லோவில் இடம்பெற்ற - இலங்கை விவகாரம் தொடர்பான - விசேட கலந்துரையாடலிலேயே இணைத் தலைமைகள் இந்த முடிவை எடுத்திருக்கின்றன.

இணைத் தலைமைகளின் சந்திப்பின் பின்னர் வழமையாக வெளியிடப்படும் கூட்டறிக்கையை இம்முறை வெளியிடுவதில்லை என்று இணைத் தலைமைகள் விசேடமாகத் தீர்மானித் தன என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னாரில் நேற்று அதிகாலை புலிகள் திடீர்த் தாக்குதல்! 4 படையினர் பலி!

கொழும்பு, ஜூன் 28

வவுனியா, மன்னார் பகுதிகளில் நேற்று புதன்கிழமை அதிகாலை வேளை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதல்களில் நான்கு படையினர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் ஒருவர் ஊர்காவற்படைச் சிப்பாய்.

வவுனியாவில் செட்டிகுளம் அரவந்தலாவ பிரதேசத்தில் அமைந்துள்ள சோதனைச் சாவடி ஒன்றின் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் இரண்டு படையினரும் ஓர் ஊர்காவற்படைச் சிப்பாயும் உயிரிழந்திருக்கின்றனர். மன்னார் தள்ளாடி பகுதியில் இராணுவ நிலை ஒன்றின் மீது சிறிய ஆயுதங்கள் கொண்டு புலிகள் நடத்திய தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டார்.

இதேவேளை -

இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் வெளியிட்டிருக்கும் தகவலில், மன்னார் - வவுனியா பிரதேசத்தில் தள்ளாடியில் இருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள பதுங்கு குழிகளை தாக்கி அழித்துள்ளனர் என்று தெரிவித்திருக்கின்றனர்.

புதன்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 5 (08ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்குச் சட்டத்தை இரவு 8 மணிக்கு நடைமுறைப்படுத்த படைத்தரப்பு இணக்கம்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

குடாநாட்டில் சைவ ஆலயங்களில் இடம்பெறும் பெருந் திருவிழாக்களை முன்னிட்டு ஊரடங்குச் சட்டத்தை இரவு 8 மணிக்குப் பின்னர் நடைமுறைப்படுத்த படைகளின் யாழ்.தளபதி ஜி.ஏ.சந்திரசிறி இணக்கம் தெரிவித்துள்ளார்.

அரசஅதிபர் கே.கணேஷ் படைத்தளபதியுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதையடுத்து ஊரடங்கு நேரத்தை நீடிப்பது குறித்து உறுதியளிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.

குடாநாட்டில் இப்போது பெரும்பாலான ஆலயங்களில் வருடாந்தப் பெருந் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. 7 மணிக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இரவு 8 மணிக்குப் பின் ஊரடங்கை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யும்படி அரச அதிபர் (08ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. சமாதானச் செயலக அதிகாரி குடாநாட்டிற்கு இரண்டு நாள் விஜயம்

யாழ்ப்பாணம்,ஜூன் 28

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் - இயங்கும் சமாதானச் செயலகத்தின் அதிகாரியான பேயர் ரெயினர் இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு குடாநாட்டுக்கு வந்திருந்தார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தற்போதைய நிலைமையை நேரில் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவே அவர் இங்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணத்தின் உணவு மற்றும் அத்தியாவசிய சேவைகள் திருப்திகரமாக நடைபெறுகின்றனவா, மனிதாபிமானப் பணிகளை செய்வதில் இடையூறுகள் உண்டா, மனித உரிமை மீறல்கள் எந்தளவுக்கு மோசமடைந்துள்ளன மற்றும் மக்களின் இயல்பு நிலை எந்தளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பன குறித்து நேரில் கண்டறிந்து தலைமையகத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதே அவரின் விஜயத்தின் முக்கிய நோக்கம் எனத் தெரியவந்தது.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் முதல் கட்டமாக உள்ளூராட்சித் தேர்தல்கள்

கொழும்பு,ஜூன் 28

கிழக்கில் முதற்கட்டமாக உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்த அரசு முடிவு செய்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்த பின் கிழக்கில் முதற் கட்டமாக பிரதேச சபை, நகர சபைகளுக்கான தேர்தல்களை நடத்தவும் -

இரண்டாவது கட்டமாக கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல்களை நடத்தவும் - அரசு முடிவு செய்துள்ளது.

கிழக்கில் 99 சதவீதமான பகுதிகள் விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன என்றும், எஞ்சிய பகுதியும் சில தினங்களில் மீட்கப்படும் என்றும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கிழக்கு முழுமையாக மீட்கப்பட்டவுடன் தேர்தல்களை நடத்த ஏற்பாடு செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

(அ-1)

## தமிழ் ஊடகவியலாளருக்கு சோதனையின்போது தொந்தரவு!

### ஊடக அ. அட்டையை படைச்சிப்பாய் ஏற்க மறுப்பு

கொழும்பு, ஜூன் 28

தேசியப் பாதுகாப்புத் தொடர்பான அரசின் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு அலுவலகம் திரும்பிக்கொண்டிருந்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் விமானப்படைச் சிப்பாயால் தொந்தரவுக்கு உள்ளாக்கப்பட்டார். தகவல் திணைக்களம் வழங்கிய அடையாள அட்டையை ஏற்கமுடியாது என்று தெரிவித்து, முரண்டுபிடித்து, ஊடகவியலாளரை இம்சைப்படுத்தினார் அந்தச் சிப்பாய்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் கொழும்பு காலி வீதி, காலி முகத்திடலுக்கு முன்பாக இடம்பெற்றிருக்கின்றது.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி, காலி வீதியிலுள்ள, தேசிய பாதுகாப்புத் தகவல் நிலையத்தில் நேற்றுக் காலை 10.30 மணிக்கு செய்தியாளர் மாநாடு இடம்பெற்றது. இந்த மாநாட் (08ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் மீட்ட பிரதேசத்தில் பெரும் தேடுதல்; 300 பேர் கைது

கொழும்பு, ஜூன் 28

கொழும்பு புறநகர்ப் பகுதியான ராஜகிரியவில் நேற்று முன்தினம் சக்தி வாய்ந்த கிளைமோர் குண்டு ஒன்று வாகனம் ஒன்றில் கடத்திவரப்பட்டு நிலத்தில் புதைக்கப் பட்ட நிலையில் மீட்கப்பட்ட சம்பவத்தை அடுத்து அந்தப் பிரதேசத்தில் நேற்றுக் காலை பெரும் தேடுதல் நடத்தப்பட்டிருக்கிறது.

ராஜகிரிய ஒபேசேகரபுரவில் அதிகாலை முதல் நூற்றுக்கணக்கான பொலிஸாரும், படையினரும் இணைந்து நடத்திய தேடுதலில் முந்நூறு பேர்வரை கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்களில் 100 பேர் மேலதிக விசாரணைகளுக்காக தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டனர். ஏனையோர் விடுவிக்கப்பட்டனர். கைதானவர்களில் 250 பெண்களும் அடங்குவர் என்று. பொலிஸார் தெரிவித்தனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் தேர்தல் நடத்துவது என்பது வெறும் கேலிக்கூத்து

### சம்பந்தன் சொல்கிறார்



கொழும்பு,ஜூன் 28

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தலை அரசு நடத்துவது என்பது கேலிக்கூத்தான விடயம்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன்.

கிழக்கு மாகாணத்தில் அரசு விரைவில் தேர்தல் நடத்தத் திட்டமிட்டு வருகிறது என வெளியான செய்தி தொடர்பாகப் பி.பி.ஸிக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தும் - ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டில் இருந்து வெளியேறி (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ராஜகிரியவில் கிளைமோர் குண்டு மீட்பு:
# கிளிநொச்சி உள்ளூராட்சி அதிகாரி உட்பட எட்டுப் பேர் கைது!

கொழும்பு, ஜூன் 28

கொழும்பு புறநகர்ப்பகுதியான ராஜகிரியவில் அரச வாகனம் ஒன்றில் கடத்திவரப்பட்டதாகக் கூறப்படும் கிளைமோர் கண்ணி வெடி கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பாலசுந்தரம் உட்பட எட்டுப்பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின்போது பல தகவல்கள் வெளியாகியிருப்பதாக பொலிஸார் குறிப்பிட்டி ருக்கிறார்கள்.

சந்தேக நபர்கள் வருகை தந்த விதம், அவர்கள் இதற்கு முன்னர் தங்கியிருந்த இடங்கள், கிளைமோர் குண்டை வாகனத்தில் ஒளித்து வைத்து கொண்டுவந்த முறை ஆகியன தொடர்பில், தகவல்கள் சந்தேக நபர்களால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேரா தெரிவித்திருக்கிறார். இந்த விடயம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 8 பேரை கைது செய்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**22கிலோ குண்டு**

நேற்றைய தினம் மீட்கப்பட்ட கிளைமோர் குண்டு 22 கிலோ எடையைக் கொண்டது என்று பொறளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைதான சந்தேக நபர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் பல தகவல்கள் தெரியவந்துள்ளன என்று பாதுகாப்பு விவ்காரங்கள் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவும் நேற்றுத் தெரிவித்தார். அவர் கூறியதாவது:-

ராஜகிரிய ஒபயசேகரபுர பகுதியில் வீட்டுத் தோட்டம் ஒன்றில் புதைக்கப் பட்ட நிலையில் மீட்கப்பட்ட கிளைமோர் கண்ணிவெடி தொடர்பாக எட்டுப் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

**பிரிட்டனில் இருந்து உத்தரவு வந்ததாம்**

இவர்களில் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் 'கப்' ரக அரச வாகனத்தின் சாரதியும் அடங்குவர். ஏனைய இருவர் கொழும்பில் விடுதிகளில் தங்கியிருந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. அவர்களில் ஒருவர் கட்டடத் தொழிலாளி. மற்றவர் முடி திருத்துபவர். கிளைமோர் மீட்கப்பட்ட வீட்டில் இருந்த பெண் ஒருவரின் புதல்வர்கள் என இருவரும் விசாரணையின்போது கூறியுள்ளனர். வெளிநாடு செல்வதற்காக தாங்கள் கொழும்புக்கு வந்தனர் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

கிளைமோர் குண்டை மருதானைக்கு கொண்டு செல்லுமாறு பிரிட்டனில் இருந்து தொலைபேசி மூலம் உத்தரவிடப்பட்டது என்று சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். பயங்கரவாதிகள் வெளிநாடுகளில் இருந்தும் செயற்படுகின்றனர் என்பது இதன் மூலம் தெரிய வந்துள்ளது.

- இவ்வாறு கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

# பலாலி ஆசிரிய கலாசாலையில் சிறப்புற நடந்த மணிவிழா நிகழ்வு

நல்லூர், ஜூன் 28

பலாலி ஆசிரியர் கலாசாலையின் மணிவிழாக் கொண்டாட்டமும் 'கலாவதி' நூல் வெளியீட்டு விழாவும் நேற்றுப் புதன் கிழமை கலாசாலையில் சிறப்புற நடைபெற்றன.

ஆசிரிய மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு மன் றத்தின் தலைவர் க.பரமேஸ்வரன் தலைமை வகித்தார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேசும் சிறப்பு விருந் தினர்களாக வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன், ஆசிரியர் கல்லூரியின் முன்னாள் அதிபர் சோ.பத்மநாதன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ்.சிவலிங்கராஜா, கல்லூரி அதிபர் த.காங்கேசபிள்ளை, உதவி அதிபர் க.கனநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர்

நிகழ்வை கல்வியற் கல்லூரி பீடாதிபதி மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து பிரதம விருந்தினர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரைகள் இடம் பெற்றன.

தொடர்ந்து 'கலாவதி' சஞ்சிகையை கலாநிதி த.கலாமணி வெளியிட்டு வைத்தார்.

(202-111)

# அரியாலை கிழக்குப் பகுதியில் படையினரின் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அரியாலை கிழக்கு, கொழும்புத்துறை, முள்ளி, செம்மணி ஆகிய பிரதேச மக்களுக்கு மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

யாழ்.படைகளின் தளபதி ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் வழிகாட்டலில் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இந்த வைத்திய முகாமில் 300 இற்கு மேற்பட்டவர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர். பாடசாலை மாணவர்களும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக சிறார்களுக்கு ஏற்படும் நோய்களுக்கு இந்த முகாமில் சிகிச்சை அளிக்கப்பட்டது.- என்று பலாலி படைத் தலைமையகம் தெரிவித்தது.

(1)

# ஜனாதிபதி குழுவின் அலுவலகம் இன்று திறப்பு

கொழும்பு, ஜூன் 28

காணாமற் போனோர் தொடர்பாக ஆராய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் அலுவலகம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப கட்டடத் தொகுதியில் திறந்து வைக்கப் படும்.

இக்குழுவில் அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, டலஸ் அழகப்பெரும, பிரதி அமைச்சர்களான ஆர். ராதாகிருஷ்ணன், கே.ஏ.பாயிஸ் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

காணாமற்போனோர் தொடர்பான விவரங்களை இந்த அலுவலகத்துக்கு வழங்கலாம் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார். (சி)

# மஹியங்கனையில் கைக்குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 28

மஹியங்கனை - கொரபொர என்ற இடத்தில் பற்றையொன்றினுள் இருந்து இரு கைக்குண்டுகளை மஹியங்கனைப் பொலிஸார் கடந்த செவ்வாயன்று மாலை மீட்டுள்ளனர்.

மஹியங்கனைப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றினையடுத்தே, இவ் விரு கைக்குண்டுகளும் மீட்கப்பட்டிருக் கின்றன.

இது குறித்து, தியத்தலாவை இராணுவ முகாமின் குண்டுகள் செயலிழக்கச் செய்யும் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டதும் அப்பிரிவினர் அங்கு விரைந்து வந்து இரு கைக்குண்டுகளையும் செயலிழக்கச் செய்தனர்.

இக்குண்டுகள் சம்பந்தமாக, மஹியங்கனைப் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (சி)


**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்**
**புதிய கட்டடம் அமைத்தல்**
**கூலி ஒப்பந்தம்**

எமது சங்கத்திற்கு 48'X35' அளவுடைய மாடிக்கட்டடம் அமைப்பதற்கு கூலி ஒப்பந்தம் செய்ய விரும்புபவர்களிடமிருந்து 05.07.2007ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கேள்வி கோரல் எம்மால் கோரப்படுகின்றது. கட்டடம் தொடர்பான விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுமுகாமையாளர். (சி/52778)

**தேவை**

எமக்கு அனுபவமிக்க Mechanical Foreman தேவைப்படுகின்றார். உடன் நேரில் வரவும்.

யூரோவில்

இல.866, பருத்தித்துறை வீதி, நல்லூர். யாழ்ப்பாணம். (சி/52779)


## கண்ணீர் அஞ்சலி



எமது நல்லூர் சமநல சேவைகள் குழுவில் நீண்ட காலமாகத் தலைவராகப் பதவி வகித்துச் சிறப்பாகச் செயலாற்றிய

**கனகரத்தினம் சத்தியானந்தசிவம்**

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்-சமாதான நீதிவான்)*

அவர்கள் 26.06.2007 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றோம். அமரரின் சேவையை நினைவு கூர்வதோடு, அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாரின் துன்ப துயரங்களில் பங்கேற்றுக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமநல சேவைகள் சமூகம்
சமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்.மாவட்டம்.

(62299)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அண்மையில் மறைந்த எமது தலைவரின்
அன்புப் பாரியார்
திருமதி அன்னபூரணம்
அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து
அன்னாரது துணைவருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

*மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை.* (62297)
பல்துறைசார் குழுவினர், உளநலச் சங்கத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சின்னத்துரை



ஏழாலை தெற்கு, மயிலங்காடு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்துரை நேற்று (27.06.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் செல்வமணியின் அன்புக் கணவரும் பிரதீசன் (பிரான்ஸ்), நிர்மலா (லண்டன்), மதி, சுதர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி, கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2007) வியாழக்கிழமை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு, மயிலங்காடு,
சுன்னாகம். (62292)

தகவல்:
*மனைவி, பிள்ளைகள்.*

### திருமதி கந்தையா சின்னப்பிள்ளை



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சின்னப்பிள்ளை நேற்று (27.06.2007) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் (வைத்தியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களானஅம்பிகாவதி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் பரமராசா மற்றும் காலஞ்சென்றவர்களான அம்மாக்கா, கந்தையா அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சண்முகநாதன், அம்பலவாணர் (மண்டைதீவு) ஆகியோரின் பாசமிகு மாமியும் பஞ்சரத்தினம், கிருஸ்ணவேணி, மகேந்திரம் (பிரான்ஸ்), பானுமதி (கொழும்பு), கந்தரூபன் (லண்டன்); நிஷாந்தினி (லண்டன்), ஜெயரூபன் (கனடா), சர்மிளா (கனடா), கதிரைமலைநாதன் (வவுனியா), அனுஷியா (வவுனியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மயூரன் (பலாலி ஆசிரியர் கலாசாலை), வசிகரன் (சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், நல்லூர்), சசிகரன், சுதாகரன், துஷ்யந்தன், சர்மிளா, பிரத்தியுனன், விசுவன், ஆரியன், நீகா, மதுசன், திவ்யா, காவியா, பகவியா, தெய்வீகா, ஜனகன், ஜனனி, தர்சிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் அக்ஷயா, அபினயா ஆகியோரின் கொள்ளுப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 27.06.2007 புதன்கிழமை நடைபெற்று, பூதவுடல் கோம்பை யன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.48, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம். (62300)

தகவல்:
*வே.அம்பலவாணர்*
(மருமகன்)


**தவறிவிட்டது**

புதுவீதி, ஆறுகால்மடம் என்னும் முகவரியைச் சேர்ந்த நாகமுத்து சுப்பிரமணியம் என்பவரது தேசிய அடையாள அட்டை (401021817v) 23.06.2007 அன்று யாழ்.முனீஸ்வரா வீதியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.

**விற்பனைக்கு**

புதிய நிலையில் உள்ள **Passion Plus** விலை 98,000/=, விலையில் மாற்றம் ஏற்படாது. மற்றும் கலப்பின ஆண் நாயும் விற்பனைக்குண்டு.

*தொடர்பு: பி.ப 3 - 6 சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம்.*

கோல்டன் பாம், 77, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**வெளிவந்துவிட்டது**

2007 முதல் நடைமுறைக்கு வந்த
இரசாயனவியல்
தரம் 10
ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
235, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 3481
(சி/527777)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி வேலாயுதபிள்ளை தியாகேஸ்வரி



மீசாலை, ஐயா கடையடியைப் பிறப்பிடமாகவும் சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதபிள்ளை தியாகேஸ்வரி (தங்கச்சியம்மா) நேற்று (27.06.2007) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை ஐயா கடையடி,
சாவகச்சேரி. (62290)

தகவல்:
*தி.வேலாயுதபிள்ளை*
*சாயிராம் மருந்தகம் - சங்கத்தானை.*

### சபாநாதன் தனலக்சுமி

யாழ்ப்பாணம், சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாதன் தனலக்சுமி நேற்று (27.06.2007) புதன்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துச்சாமி - சோதியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கனகசபை - மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகளும் சபாநாதனின் (முன்னாள் கணக்காளர், **C.T.B.**) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பத்மநாதன் (றிக்கோ), கனகேஸ்வரி, விமலநாதன், செல்வநாதன், கமலநாதன், கோணேஸ்வரநாதன் , புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகாம்பிகை, பத்மநாதன், பத்மநிதி, சிறிநாதன், தயாநிதி, இராஜநாதன், சிவநிதி, செல்வநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.17, விதானையார் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5437
222 6845

தகவல்:
*விமலநாதன், கமலநாதன்,*
*கனகேஸ்வரி.*
*(சகோதரர்கள்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை செவ்வாய் முதல் அதிகரிப்பு

### சோதனைகள் சிறிது தளர்த்தப்பட்டுள்ளன

நல்லூர், ஜூன் 28

குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்திற்கு செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை செவ்வாய்க்கிழமை முதல் அதிகரித்துள்ளது.

திருவிழாவை முன்னிட்டு பண்ணை முதல் நயினைத் துறைமுகம் வரையான சோதனைச் சாவடிகளில் கடுமையான சோதனைகள் இடம்பெறவுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து கொடியேற்றதினம் முதல் நயினாதீவுக்குச் செல்லும் யாத்திரிகர்களின் எண்ணிக்கை வழமையிலும் பார்க்க கணிசமான அளவு குறைந்திருந்தது.

குறிப்பிட்ட சோதனைச் சாவடிகளில் படை அதிகாரிகள் பொதுமக்களுக்கு வசதியாக முன்னரை விடச் சிறிது தளர்த்தப்பட்டுள்ளன.

அதனையடுத்து ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எனினும் தனியார் வாகனங்களில் செல்லும் யாத்திரிகர்கள் அல்லைப்பிட்டியில் சோதனைக்காக சுமார் ஒருமணி நேரம் வரை தாமதிக்க வேண்டியுள்ளது.

நயினாதீவுக்கு வந்த யாத்திரிகர்களிடம் சோதனைச் சாவடிகளில் ஏற்படும் காலதாமதம் குறித்துக் கோட்டபோது

நாங்கள் தினமும் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். துன்பமே இயல்பு வாழ்வு என்றாகிவிட்ட நிலையில் ஆலயத்திற்கு வரும்போது ஏற்படக் கூடிய கஷ்டங்கள் ஒன்றும் எமக்குப் பெரிதல்ல என்பதாலேயே அம்பாளைத் தரிசிக்க வந்திருந்தோம் எனத் தெரிவித்தனர்.

(203-111)



வடமராட்சி தும்பளை கிழக்கில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு 'பார்க்' நிறுவனம் உலர்உணவுப் பொதிகளை வழங்கியது. நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் கு.பிரபா பயனாளி ஒருவருக்கு உலர்உணவுப்பொதி வழங்குவதையும் பயனாளிகளில் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம். *படங்கள்: சுந்தா*

# காரை.கணேசா வித்தியாசாலையை மீண்டும் இயக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

காரைநகர் கல்லந்தாழ்வு கணேசா வித்தியாசாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இப்பிரதேச மக்கள் காரைநகர் உதவி அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1991ஆம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வின் போது மூடப்பட்ட இப்பாடசாலை மக்கள் மீளக் குடியமர்ந்து 15 வருடங்கள் கடந்த நிலையிலும் மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனால் இப்பிரதேசத்தை சேர்ந்த பெருமளவு மாணவர்கள் நீண்ட தூரத்தில் உள்ள பாடசாலைக்குச் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இப்பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்து உள்ளதால் இப்பாடசாலையை மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உதவி அரச அதிபர் ஊடாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். (203-73)

### அசாதாரண சூழலால் தடைப்பட்டிருந்த

# ஆழிப்பேரலை வீட்டுத்திட்டப் பணிகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாகத் தடைப்பட்டிருந்த ஆழிப் பேரலை அனர்த்த வீட்டுத்திட்டப் பணிகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அசாதாரண சூழ்நிலை காரணமாக தடைப்பட்டிருந்த ஆழிப்பேரலை வீட்டுத் திட்டங்களின் கீழ் மருதங்கேணியில் 2 ஆயிரத்து 169 முழுமை வீடுகளதும், பருத்தித்துறையில் 520 முழுமை வீடுகளதும் கட்டட வேலைகளையே விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆழிப்பேரலை அனர்த்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் 9 ஆயிரத்து 140 வீட்டுத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் இதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றார்.

இதன் முதற்கட்டமாக மருதங்கேணியில் முழு வீட்டுத்திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 532 வீடுகளும், பகுதி வீடாக 73 வீடுகளும் அமைக்கப்படும்.

பருத்தித்துறையில் முழு வீட்டுத்திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 508 வீடுகளும், பகுதியாக 2 ஆயிரத்து 27 வீடுகளுமாக மொத்தம் 9 ஆயிரத்து 140 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக 412 முழு வீடுகளும், 73 பகுதி வீடுகளும் மருதங்கேணி பிரதேசத்தில் முடிவடைந்துள்ளன.

இதேவேளை- பருத்தித்துறையில் ஆயிரத்தி 34 முழு வீடுகளும், ஆயிரத்து 988 பகுதி வீடுகளுமாக மொத்தம் 3 ஆயிரத்து 507 வீடுகளின் வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. (203-95)

# மாவட்டத்திலுள்ள விதவைகளின் விவரங்கள் சமூக சேவைகள் திணைக்களத்தால் பதிவு

கைதடி, ஜூன் 28

யாழ்.மாவட்டத்திலுள்ள விதவைகளின் விவரங்கள் சமூக சேவை அலுவலர்களால் திரட்டப்பட்டு வருகின்றன என மாவட்ட சமூக சேவை அலுவலர் கிருபாகரன் தெரிவித்தார்.

உதவிக் கொடுப்பனவை பெற்றுவருபவர்கள், கொடுப்பனவைக் பெற்றுக்கொள்ளவேண்டிய ஏற்பாடுகளை மேற்கொண்டவர்கள், உதவி தேவைப்படுவோர், விதவைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பவை குறித்து விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த விவரங்களை அடிப்படையாகக் கொண்டு இலக்குகள் தீர்மானிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (202)

# சரசாலை – கப்பூது வீதியில் துர்நாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

தென்மராட்சிப் பிரதேசத்தில் சரசாலைக்கும் கப்பூதுவுக்கும் இடைப்பட்ட வீதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் பயணிகள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பகுதியில் உள்ள பற்றைகளுக்குள் மலக்கழிவுகளைக் கொட்டுவதே இத்துர்நாற்றத்திற்குக் காரணம் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. மக்கள் நடமாட்டம் குறைந்த நேரங்களில் வாகனங்களில் மலக்கழிவுகள் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுகின்றன.

இந்த நிலைமை நீடித்தால் பிரதேச மக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (207)

## மெய்வன்மை போட்டி

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதி மாவட்ட செயலர் எம்.விஜயரகுநாதன்கலந்துகொள்வார். (202)

# சைக்கிள் பாதுகாப்பு நிலையம் மட்டுமே யாழ்.மாநகர சபையால் நடத்தப்படுகிறது

### மாநகர ஆணையாளர் சரவணபவ கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களைத் தவிர வேறு வாகனத் தரிப்பிடம் எதனையும் தாம் நடத்தவில்லையென யாழ்.மாநரகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சைக்கிள் பாதுகாப்புநிலையங்களை மட்டுமே மாநகரசபை நடத்தி வருகின்றது. வேறு தனியார் வாகனங்களுக்கான தரிப்பிடம் எதுவும் மாநகர சபையினால் நடத்தப்படவில்லை. அவ்வாறு தரிப்பிடக் கட்டணம் அறவிடுவதற்கு எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என ஆணையாளர் மு.சரவணபவ தெரிவித்தார். (50)




## தபால் சேமிப்புக் கணக்கின் வட்டி வீதம் அதிகரிப்பு

நல்லூர், ஜூன்28

அஞ்சல் அலுவலகங்களில் தேசிய சேமிப்பு வங்கி தபால் சேமிப்புக் கணக்கிற்கான வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதம தபாலக தபால் அதிபர் வே.துரைசிங்கம் தெரிவித்தார்.

நிரந்தர வைப்புக் கணக்கிற்கு வருடம் ஒன்றிற்கு 15 வீதமாக வட்டி அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு வரிகள் அறவிடப்படுவதில்லை. பொதுமக்கள் தபால் சேமிப்புக் கணக்கின் மூலம் சிறந்த பயனைப் பெறமுடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

(203-111)

# பதிவாளராகத் தற்காலிகமாக கடமைபுரிபவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

தற்காலிகமாக பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவாளராக இருப்பவர்களை நிரந்தரமாக்குவதற்கு அவர்களது விவரங்களை பதிவாளர் திணைக்களம் கோரியுள்ளது.

இது சம்பந்தமாக விவரங்களை மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்காலிமாகப் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணப் பதிவாளராக இருப்பவர்கள் உரியவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (203-68)

# பரு.ஆதார வைத்தியசாலையில் சிரமதானம்

வடமராட்சி, ஜூன் 28

மக்கள் வங்கியின் பருத்தித்துறை கிளையினர் வங்கியின் 46 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிரமதானப்பணிகளை மேற்கொள்ள வுள்ளனர்.

அத்துடன் அவர்களால் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கட்டடப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டு குழந்தைகள் விடுதிப் புனரமைப்புப் பணிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகளில் மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொது முகாமையாளர் த.க.ஆனந்தராஜா கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். (203-160)

## இந்து ஆலய பூசகர்களுக்கு கிரியைகள் தொடர்பான வகுப்பு

நல்லூர், ஜூன் 28

இந்து ஆலய பூசகர்களுக்கு ஆலய கிரியைகள் தொடர்பான புதிய வகுப்பு ஆனைப்பந்தி குருகுலத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகவுள்ள இந்த வகுப்பில் இந்து ஆலய பூசகர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளனர்.

இதற்கான பதிவுகளை ஆனைப்பந்தியில் அமைந்துள்ள குருகுலம், நல்லூர் நாவலர் மணி மண்டபம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள யாழ்.மாவட்ட, பிராந்திய அலுவலகங்களில் பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார். (207)

# வடமராட்சியில் இரவுநேர மின்தடை மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்பு

கரவெட்டி, ஜூன் 28

வடமராட்சிப் பிரதேசத்தில் இரவு நேர மின்வெட்டால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் குறிப்பிட்ட ஒரு நேரம் இன்றித் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுகின்றது. இவ்வாறு தடைப்படும் மின்சாரம் நீண்ட நேரம் இல்லாமலும் போகின்றது.

இதனால் மாணவர்களே பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள்தான் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளனர்.

மாணவர்களின் எதிர்காலத்தை உணர்ந்து உரியவர்கள் இதில் அக்கறை கொண்டு இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (203-70)

## மனிதன் தன்மேல் உள்ள பற்றால் தன்னுள் இருக்கும் தெய்வத்தை உணர்வதில்லை

ஏன், இறைவன் அவதரிக்கிறார்? மனிதன் தன்னுள் உறையும் தெய்வீகத்தை உணரச் செய்யவும், வேற்றுமையில் ஒற்றுமை காணச் செய்யவும்தான் அவதரிக்கிறார். ஆன்மீகத்தின் சாராம்சமே வேறுமையாகத் தெரிபவைகளில் ஒற்றுமையை அறிந்து உணர்வதே. இதுதான் மனித வாழ்க்கையின் இலக்கு. பெயர் எதுவானாலும் நாடெதுவானாலும் வாழும் முறை எது ஆனாலும் ஆத்மா ஒன்றுதான். ஆத்மாவைத்தான் மனச்சாட்சியொன்று குறிப்பிடுகிறார்கள். அது உடலின் பாதத்திலிருந்து உச்சந்தலைவரை ஊடுருவிப் பரந்திருக்கிறது. ஆன்மீகத்தின் நோக்கமே அனைவரிடமும் நிறைந்திருக்கும் ஆத்மா ஒன்றே என்பதைப் புரிந்துகொள்வதுதான். மனிதன் தன்தேகத்தின் மேல் வைத்திருக்கும் பற்றின் காரணமாகத் தன்னுள் நிறைந்திருக்கும் தெய்வதத்துவத்தைப் புரிந்துகொள்ள முடிய வில்லை. அதனால்தான் ஒற்றுமையில் வேற்றுமை காண்கிறான் (Diversity in Unity). இதற்கு அறியாமையே காரணம். பிரிந்து கிடப்பதாக நீ கருதும் பலவற்றிலும் இழையோடும் ஒருமைத் தன்மையை நீ காணவேண்டுமென்பதற்காகவேஇறைவன் அவதரிக்கிறான்.



சாயி சிந்தனை

## சப்பரம் ஏறி வலம்வருவாய் தாயே!



நயினைப் பதியினிலே அருளாட்சி செய்கிறாய்அம்மா
வேண்டிடும் அடியவரின் வேதனையைப் போக்கிடுவாய் அம்மா
சோதி வடிவமாய் நீ மக்களின் சோதனையைத் தீர்த்து
வைப்பாய் அம்மா
உன்னையே தஞ்சம் என்று நம்பினோர்க்கு நீ அருள்
புரிந்திடுவாய் அம்மா
பக்தர்கள் புடைசூழ சப்பரத்தில் ஏறி நீ வலம் வருவாய் தாயே

*- நயினைக் கலா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Sirambiyadi Lane.
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 02/07/2007 9.00am

ஏனைய அனைத்துக்கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

Batch I :29/06/2007 Batch II :30/06/2007
Batch III:01/07/2007 Batch IV :04/07/2007

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**
உத்தியோகபூர்வ முடிவுகள்

893 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மீனம் 02 11 28 29

26-06-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4121431 - 4136422

ஜக்பொட் பரிசு ரூபா.3,882,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 332,395 | 10/- | 3,323,950/- |
| 2 இலக்கங்கள் | 30,470 | 20/- | 609,400/- |
| 1 இல. + லக்கினம் | 30,129 | 30/- | 903,870/- |
| 2 இல. + லக்கினம் | 2,823 | 100/- | 282,300/- |
| 3 இலக்கங்கள் | 816 | 500/- | 408,000/- |
| 3 இல. + லக்கினம் | 75 | 5,000/- | 375,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,882,500/- | - |
| மொத்தம் | | | 6,302,520/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 396,717 | | 7,326,020/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,624,650/-

தொடர் இல. 5014659 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 ஜுன் மாதம் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4122739-6-41 |
| களுத்துறை | 4127586-2-55 |
| கம்பஹா | 4135596-3-85 |
| பதுளை | 4122368-1-18 |
| மொனராகலை | 4129689-9-47 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

**விடுதலைப் பெருவிழா**

இடம்: நாற்சதுர சுவிசேஷ சபை - நல்லூர், முத்திரைச்சந்தி.
காலம்: 29, 30 -06 & 01.07.2007
(வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில்)
நேரம்: பிற்பகல் 3.30 மணி

இயேசு விடுதலை கொடுக்கிறார்

பிரவேசம் இலவசம்

* கவலை கண்ணீரிலிருந்து,
* தீராத வியாதியிலிருந்து,
* பில்லி சூனிய கட்டியிலிருந்து,
* பிசாசின் பிடியிலிருந்து

01.07.2007 Bro.N. பத்மதேவாவின்
அன்பான இயேசு விடுதலை கீதங்கள் நடைபெறும்.

'வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத் 11:28)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(62282)

## நாய் விற்பனைக்கு

மோதம் நிரம்பிய ஊசிகள் போடப்பட்ட, அல்சேஷன் பெண் நாய் உடன் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. புத்தகம் உண்டு.

**நக்கீரன்,**
சுகவாழ்வுப் பயணம், கோணாவளை வைரவர் லேன், கொக்குவில்.
**077 3618524**
(62286)

## விற்பனைக்கு

நல்ல ரக முச்சக்கர வண்டி விற்பனைக்கு உண்டு. இல. N.P. - JZ - XXXX

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
**குமாரசாமி ராசன்,**
14, முதலியார் லேன், நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
(62278)

## மணமக்கள் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பம் கனடாவில் பிரஜாவுரிமை பெற்ற 1987 இல் பிறந்த, பூசம் 2ஆம் பாதம், கிரக பாவம் 25 உடைய, 5'2", அழகிய சிவந்த நிறமுடைய பெண்ணுக்கு படித்த, நற்குணமுள்ள மணமகனும் (உள்நாடு/வெளிநாடு). யாழ். இந்து கௌரவ குடும்பம், லண்டன் பிரஜாவுரிமை உள்ள, 1968இல் பிறந்த, பூரம் 2ஆம் பாதம், செவ்வாய் 8, கிரகபாவம் 45, லண்டனில் பிரபல தொழிலதிபருக்கு 5'6" மணமகனுக்கு மணமகளும் (உள்நாடு/வெளிநாடு) தேவை. (மணமகன் கொழும்பு வந்துள்ளார்.)*

தொடர்பு: சிந்துஜன், 0776184434. (6229I)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்28

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் நிறுவுநர் நினைவுதினமும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேபிள் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இதில் பிரதம விருந்தினர்களாக யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி வைத்தியக் கலாநிதி இ.சிவசங்கர், தாய்சேய் நல வைத்திய அதிகாரி திருமதி ஜோசபின் திருமகள் சிவசங்கர் ஆகியோர் கலந்துகொள்வர்.

(203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்28

மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சங்க 80ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 பத்து மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இ.இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்28

திருநெல்வேலி, பலாலி ஆசிரியர் கலாசாலையில் சைவ விளக்கு மணி விழா மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

த.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக உயர் கல்விப் பீடாதிபதி கே.கந்தசாமி பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். இதில் யாழ். பல்கலைக்கழக கல்வியியற் துறை கலாநிதி ஜெயலட்சுமி இராஜநாயகம் வெளியீட்டுரை நிகழ்த்த தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் மதிப்பீட்டுரை நிகழ்த்துவார்.

(203)

## கல்வியியல் கல்லூரியில் சான்றிதழ் பெறாதவர்களுக்கு

யாழ்ப்பாணம்,ஜூன்28

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் 2002/ 2004, 2003/2005 கல்வியாண்டில் பயிற்சி பெற்று வெளியேறிய இதுவரை டிப்ளோமா சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாத ஆசிரியர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரிக்கு சமுகமளித்து சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

இத்தகவலை பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தெரிவித்துள்ளார்.

கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வெளியேறியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 11 ஆம், 12 ஆம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு சான் றிதழ் பெறாதவர்களையே அலுவலகத்துக்கு சமுகம் [illegible] (1-202)

## பெருமாள் ஆலய சங்காபிஷேகம்

வண்ணை வேங்கடேச வரதராஜப் பெரு மாள் ஆலய மகா சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.30 மணிமுதல் இடம்பெறவுள்ளது. வேங்கடேச வரதராஜப் பெருமாளுக்கு நவோத்தர சகஸ்ர சங்காபிசேகமும் பரிவார மூர்த்திகளுக்கு நவகலச அபிஷேகமும் விசேட தீபாராதனையும் இடம்பெறும். மாலை சாயரட்டைப் பூசையை அடுத்து மாலை 4மணிக்கு வசந்த மண்டப்பூசை யைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருவார்.

(203)

## சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

*ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் அடியார்களே!*

*இன்று மாலை (28.06.2007) 4 மணிக்கு சப்பரத் திருவிழா நடைபெறும். நாளை (29.06.2007) வெள்ளிக்கிழமை பெருங்குளப் பதியில் எண்கோணச் சித்திரத்தேர் பவனி 10.15 மணிக்கு ஆரம்பமாகி அடியார்களுக்கு அருள் பாலிப்பார். அனைவரும் தரிசித்து திருவருள் பெறுவீர்களாக.*

*30.06.2007 சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும்.*

சிறப்பு நிகழ்வாக:-
*நாதஸ்வர கலாநிதி பருத்தி நகர்*
**விஜயகுமார் + சதீஸ்குமார்**
*ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.*

அருள் ஆசி:
*தேவஸ்தான பிரதமகுரு*
**ஸ்ரீ விஸ்ணு ஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக்குருக்கள்**
*(பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்)*

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

பெருங்குளம், கல்வயல், சாவகச்சேரி. (62272) **தேவஸ்தான பரிபாலன சபை.**

## கண்ணீர் அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியர் **ச.தவநேசன்** அவர்களின் அன்புத் தந்தை*
**க.சத்தியானந்தசிவம்** *(சத்தி மாஸ்ரர்)*
*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு ஆறுதல் தெரிவித்து எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி நிற்கின்றோம்.*

யா/புனித சாள்ஸ் ம.வி., யாழ்ப்பாணம். (62289)
அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

*எமது ஆலய குருவின் மனைவி*
*சற்குணதேவி அவர்களின் பாசமிகு தாய்*
**திருமதி தங்கசாமிஐயர் சாரதாம்பாள்**
*அவர்கள் 23.06.2007 அன்று காலமாகிவிட்டார்.*
*அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.*

தென்புலோலி, புலோலி. (62281)
**ஆலய நிர்வாகிகள்** உபயகதிர்காமம்.

## கண்ணீர் அஞ்சலி



*எமது கழக செயலாளர் லயன்*
**ச.தவச்செல்வன்**
*அவர்களின் பாசமிகு தந்தை*
*40, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்*
**கனகரெத்தினம் சத்தியானந்தசிவம் J.P.**
*(இளைப்பாறிய ஆசிரியர், முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர்)*

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.*
*அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

வடமராட்சி லயன்ஸ் கழகம். (சி52771)
**தலைவர், அங்கத்தவர்கள்.**

## மரண அறிவித்தல்



திருமதி **பூமணி முத்துக்கிருஸ்ணர்**
*(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா)*

திருமதி பூமணி முத்துக்கிருஸ்ணர் நேற்று (27.06.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா- முத்துக்கிருஸ்ணரின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் திரு.திருமதி சின்னையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் தங்கராசா, அன்னபூரணம் ஆகியோரின் மைத்துனியும் இராமநாதன் (மலேசியா), நாகநாதன் (திருகோணமலை), மகேஸ்வரி, காலஞ்சென்ற சோதிமணி மற்றும் பத்மநாதன் (காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கோகிலாம்பிகை, பூலோகநாதன் (வ.இ.போ.ச), சந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28,06.2007) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் கந்தரோடை ஆலடி இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கம்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கணக்கர் வளவு, கந்தரோடை, சுன்னாகம்.** (62287)
தகவல்: **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அலுவலகத்தில் பணிபுரிந்த தமிழ்ப் பெண் வெளிநாடு சென்றார்!

## அவரிடம் 50 லட்சம் ரூபா கப்பம் கோரப்பட்டது!!

கொழும்பு,ஜூன் 28

கொழும்பு ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் பணிபுரியும் தமிழ் அதிகாரி திருமதி. வாசுகி மகேந்திரன் தனது குடும்பத்தாருடன் செவ்வாய் நண்பகல் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளார். தமது குடும்பத்தவரிடம் கப்பம் கோரி விடுக்கப்பட்ட பயமுறுத்தல் காரணமாகவே தாமும், தனது கணவரும் குழந்தைகளும் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர் என மக்கள் கண்காணிப்புக் குழுவிடம் அவர் தெரிவித்துள்ளார்.

- இவ்வாறு மக்கள் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டாளரும், மேலக மக்கள் முன்னணித் தலைவருமான மனோகணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:-

கொழும்பு ஹவலொக் நகரில் வசித்து வந்த மகேந்திரன் தம்பதிகளுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு தொலைபேசி மூலமாக 50 இலட்சம் கப்பம் கோரி பயமுறுத்தல் விடுக்கப்பட்டது. மறுநாள் திங்கட்கிழமை காலை முற்பகல் 11 மணிக்கு இந்தக் கப்பத் தொகையை தமது வாகனத்தில் எடுத்துக் கொண்டு தெஹிவளைக்கு வரும்படியும், அங்கே பணம் கைமாறப்படும் இடம் பின்னர் தெரிவிக்கப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மகேந்திரன் குடும்பத்தினர் செவ்வாய்க்கிழமை நண்பகல் விமானம் மூலம் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர்.

அதேவேளையில் கடந்த 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை ஹவலொக் வீதியிலுள்ள தமது வீட்டில் இராணுவத்தினரும், பொலிஸாரும் திடீர்ச் சோதனை நடத்தினர் எனவும், தமக்குக்கிடைத்த அனாமேதைய தகவல் ஒன்றின் அடிப்படையிலேயே தமது வீடு சோதனையிடப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர் என்றும் மகேந்திரன் மக்கள் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபருக்கு மக்கள் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது என மனேகணேசன் எம்.பி. தகவல் தந்துள்ளார்.

## ஜயலத் எம்.பியை பயங்கரவாத தடுப்புப் பிரிவு விசாரிக்கும்

கொழும்பு, ஜூன் 28

ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன பயங்கவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவின் விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார். எனினும் தம்மை விசாரிப்பதற்கான காரணத்தை பயங்கரவாத விசாரணைப்பிரிவு தெரிவிக்கவில்லை ஏன்று ஜயலத் கூறியிருக்கிறார்.

இது தொடர்பாக ஜயலத் கருத்துக்கூறுகையில்,

எனக்கு ஏற்கனவே கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் என் மீது பயங்கரவாத விசாரணைப் பிரிவு விசாரணையை மேற்கொள்ளவுள்ளது.

நான் அண்மைக்காலமாக தமிழர்களுக்கு எதிராக இந்த அரசு இழைத்துவரும் கொடுமைகள் பற்றி அதிகம் பேசி வருகின்றேன். இதன் காரணமாகவே நான் விசாரணை செய்யப்படவுள்ளேன் என்று நினைக்கிறேன்.

விசாரிக்கும் அளவிற்கு நான் எந்தக் குற்றச் செயல்களையும் செய்யவில்லை. இருப்பினும் எந்தவிதமான விசாரணைகளையும் எதிர்கொள்ள நான் தயார் - என்றார் ஜயலத்.

# எவரது முயற்சியும் இன்றி அரசு தானாகவே கவிழும்

## எதிர்க்கட்சி எம்.பி. இப்படி நம்புகிறார்



கொழும்பு, ஜூன் 28

இந்த அரசை நாம் கவிழ்க்கத் தேவையில்லை. அது கூடிய சீக்கிரம் தானாகவே க்விழ்ந்துவிடும்.

- இவ்வாறு ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இன்று எமது நாடு சர்வதேச மட்டத்தில் பல்வேறு வகையிலும் அபகீர்த்திக்கு உள்ளாகியுள்ளது. ஐ. நா. சபையில் சோமாலியா, சூடான் போன்ற மத்திய ஆபிரிக்க நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது. இதுதான் மஹிந்த சிந்தனையா?

இன்று எமது நாட்டைப் பற்றி சர்வதேச சமூகம் நன்றாகப் புரிந்துவைத்திருக்கின் றது. ஆனால் பொய் சொல்லிச் சொல்லிக் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறது அரசு. யுத்தத்தைக் காரணம்காட்டி அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அசாதாரண முறையில் அதிகரித்து வருகிறது.

### மனித உரிமை மீறல் தலைவிரித்தாடுகிறது

நாட்டில் மனித உரிமை மீறல் தலைவிரித் தாடுகிறது. ஒரு நாட்டில் மனித உரிமைகள் மீறப்படுமானால் அதனைத் தட்டிக் கேட்பதற்கு சர்வதேச சமூகத்துக்கு உரிமை இருக்கிறது. அதேபோல் இந்தியாவிலோ இங்கிலாந்திலோ மனித உரிமை மீறப்படுகின்றது என்றால் அதனைக் கூட ஆராய்வதற்கு இலங்கைக்கும் உரிமை இருக்கிறது.

அண்மையில் சர்வதேச ஊடக கண்காணிப்புக் குழு ஒன்று இலங்கைக்கு வந்து சென்றது. அவர்கள் இலங்கையில் ஊடகச் சுதந்திரம் மிகமோசமான நிலையில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். குறுகிய காலத்துக்குள் 11 ஊடக வியலாளர்கள் கொலைசெய்யப்பட்டுள்ள னர். ஊடகவியலாளர்கள் நாட்டுக்கு மிகவும் தேவையான தொழிலைச் செய்துகொண்டி ருப்பவர் கள்.

நமது நாட்டின் ஊடகத்துறையில் அண்மைக்காலமாக நாம் ஒரு வித்தியாசத்தைக் காண்கின்றோம்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு விஷேட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசு அனைத்து தமிழ் மக்களையும் புலிகளாகவே கருதுகின்றது.

இன்று அப்பாவித் தமிழ் மக்கள் கடத்தப் படுகிறார்கள் என்பதை அரசு ஒத்துக்கொண்டிருக்கின்றது - என்று அவர் மேலும் கூறினார்.

## இரண்டாம் தவணை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சைகள் ஜூலை 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

(203)

# மூதூரில் படுகொலை செய்யப்பட்டவர்களின் சடலங்களை கதிரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்த காகங்கள்!

**'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகையின் கட்டுரையாளர் சௌமி சென்குப்தா, கிழக்கு இலங்கைக்கு விஜயம் செய்து, அங்குள்ள நிலைவரத்தைக் கட்டுரையாக வரைந்துள்ளார்.**

**மூதூரில் இடம்பெற்ற தொண்டுப் பணியாளரது படுகொலைகள் தொடர்பாக அவர் குறிப்பிட்ட தகவல்களில் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்.**

மூதூரில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் கூட்டாகப் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு நெருங்குகின்றபோதும், இக்கொலைகள் தொடர்பான அடிப்படை வினாக்களுக்கு இதுவரை விடைகள் காணப்படவில்லை.

வெள்ளை பங்களாவொன்றின் முற்ற வெளியில் கொலை செய்யப்படுவதற்கு முன்னர், கைகளை விரித்தவாறு முகங்குப் புற நிலத்தில் நின்றவாறு, சடலங்களைக் காகங்கள் பார்வையிட்டுக் கொண்டிருந்தமையை புகைப் படங்கள் காட்டுகின்றன.

### கூட்டுப்படுகொலை குறித்து அடிப்படை வினாக்களுக்கு இதுவரை பதில் இல்லை

மூதூரில் பட்டினிக்கு எதிரான அமைப்பின் தன்னார்வத் தொண்டர்கள் 17 பேர் கூட்டா கப் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு கடந்து விட்டபோதும், இக் கொலைகள் தொடர்பான அடிப்படை வினாக்களுக்கு இதுவரை விடைகள் காணப்படவில்லை.

17 ஊழியர்கள் இவ்வாறு கொலைசெய்யப்பட்டமை குரூரமான ஒரு செயலாகும். மனிதாபிமான சேவையாளர் மீது மேற்கொள் ளப்பட்ட படுமோசமான தாக்குதல்கள் இவை யாகும். சமீப வருடங்களாக சண்டைகள் நிகழ்ந்து வரும் வேறெந்தவொரு பகுதியிலும் இடம்பெறாத கோரச் சம்பவமாக நர்ம் இதனைக் கொள்ளலாம்.

2003 ஆம் வருட ஓகஸ்ட்டில் பாக்தாத்திலுள்ள ஐ. நா. தலைமையகம் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் மாண்டவர்களின் எண்ணிக்கையை மூதூர் தொகை அண்மித்துள்ளது. இப்படுகொலைகள் இடம்பெற்று ஏறத்தாழ ஓராண்டாகிவிட்டது. எனினும், இப் படுகொலைகள் தொடர்பான முக்கிய - அடிப் படை - வினாக்களுக்கு இதுவரை விடைகள் காணப்படவில்லை.

### சர்வதேசக் கண்காணிப்பாளர்களை உள்ளே வைத்திருக்க விருப்பமில்லை

இலங்கை அரசு மீண்டும் கசப்பான சிவில் யுத்தத்துக்குள் சிக்குண்டுள்ளது. அத்துடன், அது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பாளர்களை உள்ளே வைத்துக்கொள்ள விரும்பவில்லை. மாறாக நாட்டுக்கு வெளியே அவர்களை வைத்துக்கொள்வதிலேயே ஆர்வமாக உள்ளது. அதனால் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள குழுக்களின் முனைப்படைந்து வரும் கண்டனங்களுக்கு இலங்கை அரசு முகங்கொடுக்க நேரிட்டுள்ளது.

இக்குழுக்கள் இப்படுகொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்படவேண்டுமென வலியுறுத்தி வருகின்றன. அத்துடன் இப்படு கொலைகளில் [illegible] யீடுகள் இடம்பெற்றிருக்கலாம் என்றும் இவை கருதுகின்றன. இது தொடர்பாக இடம்பெற்று வரும் கால இடைவெளிகளையும் பீரங்கிகள், வான் வழித்தாக்குதல்கள் ஆகியவை தொடர்பான முன்னுக்குப் பின் முரணான சாட்சியங்களையும் சுட்டிக்காட்டுகின்றன.

ஜூரர்களைக் கொண்ட சர்வதேச ஆணைக் குழுவும் இது சம்பந்தமாக அதிருப்தி தெரிவித்துள்ளது. இது ஜெனிவாவை தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் குழுவாகும். இதில் பிரபல வழக்கறிஞர்களே அங்கம் வகிக்கிறார்கள். இந்த சர்வதேச அமைப்பு ஏப்ரலில் விடுத்துள்ள அறிக்கையொன்றில், 'விசாரணையில் போதிய உறுதிப்பாடும், தெளிவுமில்லை. போதிய பாரபட்சமற்ற நிலைப்பாடு கிடையாது' எனக் குறிப் பிட்டுள்ளது.

### மூதூர் யாரின் கட்டுப்பாட்டில் இருந்தது?

சிங்கள மேலாதிக்க அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சண்டை மூண்டு வருகின்றது. இப்போரால் சட்ட ரீதியான வட்டத்துக்கு அப்பாற்பட்ட கொலைச் சம்பவங்களும் சர்வ சாதாரணமாக இடம் பெற்று வருகின்றன. மூதூர் தமது கட்டுப் பாட்டுக்குள் இருந்தபோது மனிதாபிமான சேவையாளர்கள் படுகொலை செய்யப்படவில்லை என இருதரப்புகளும் ஒன்றையொன்று சாடி வருகின்றன. படுகொலைகள் இடம்பெற்றபோது மூதூர் யாரின் கட்டுப் பாட்டுக்குள் இருந்ததென்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது.

மனிதாபிமான சேவையாளர்கள் மீதான பிந்திய தாக்குதல்கள் இதன் ஆரம்பத்தில் இடம்பெற்றுள்ளன. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு ஊழியர்கள் தலைநகரான கொழும்பில் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்கள். அழைத்துச் சென்றவர்கள் தம்மை பொலிஸ் உத்தியோகத்தர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டுள்ளார்கள். பின்னர் இவ்விருவரின் சடலங்களும் புறநகர்ப் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

யுத்தத்தில் ஒரு திருப்புமுனை ஏற்பட்ட கட்டத்தில், இப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. அரச படையினரும், புலிப் போராளிகளும் [illegible] நகரைத் தத்தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் போராடினார்கள். ஓகஸ்ட் முதலாந்திகதி அளவில் இந்த யுத்தம் மூதூர்வரை வியாபித்தது. இது ஒரு சிறு நகரம். ஒதுக்குப்புறமானது. திருகோணமலை வளைகுடாவுக்குக் குறுக்கே அமைந்தது.

இந்நகர் நீண்டகாலமாக, அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்தது. எனினும், தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டுக் கிராமங்களால் சூழப்பட்டது. இங்கு தமிழரும் முஸ்லிம்களும் கலந்து வாழ்கிறார்கள். எனினும் இவ்விருசாராரும் நூற்றுக்கணக்கான சிங்கள இராணுவ சிப்பாய்களின் மத்தியில் வசித்து வருகின்றனர்.

இந்த மனிதாபிமானச் சேவைக் குழுவைச் சேர்ந்த அனைவரும் இலங்கையர்; திருகோணமலையைச் சேர்ந்தவர்கள். இவர்களில் ஒருவரே முஸ்லிம். ஏனையோர் அனைவரும் தமிழர். இவர்கள் மூதூர் நகருக்குப் புதியவர்கள். ஒரு மணித்தியாலப் படகுச் சேவை மூலமாக திருகோணமலையிலிருந்து மூதூரை வந்தடையலாம்.

### உள்ளூர் தொண்டர்களைக் காப்பாற்றும் கேடயங்களாக வெளிநாட்டவர்

போரில் ஈடுபட்டுள்ள தரப்புகளின் சந்தேகங்கள், தொல்லைகள் ஆகியவற்றிலிருந்து தேசிய ஊழியர் களைக் காப்பாற்றும் கேடயங்களாக வெளிநாட்டவர் உள்ளனர். எனினும் சம்பவம் நிகழ்ந்த வாரத்தில் மூதூரில் குழப்ப நிலை நிலவியது. உள்ளூர் உறுப்பினர்களான சேவையாளர்கள் தனியாக அனுப்பப்பட்டார்கள். ஏன் இப்படி அனுப்பப்பட்டார்கள் என்பதை தம்மால் ஊகிக்க முடியாதிருந்தது என பட்டினிக்கு எதிரான செயற்பாட்டுக்குழு ஊழியர்கள் குறிப்பிட்டார்கள்.

அதேவேளை, அருகிலிருந்த தீவிர வாதிகளின் நிலைகளை நிர்மூலமாக்கும் பொருட்டு, சிங்கள இராணுவம் போராடிக்கொண்டிருந்தது. எனினும், செவ்வாய்க்கிழமை, நண்பகல் 12.30 மணியளவில் நகரின் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டார்கள்.

இந்த யுத்தச் சூழலில் அகப்பட்டுக்கொண்ட மூதூர் மனிதாபிமான சேவைக்குழுவினரை திருப்பி அழைக்க திருகோணமலையிலுள்ள பட்டினிக்கு எதிரான செயற்பாட்டு நிறுவன அலுவலகம் முன்வந்தது. மூதூர் கிளைக்கு போதிய உணவுப்பண்டங்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் அறிவித்தல் விடுத்தது. அத்துடன் மூதூர் ஊழியர்களை வெள்ளை பங்களாவிலேயே தங்குமாறும் தம்மை இனங்காட்டிக்கொள்ள 'ரீ ஷேர்ட்'டுகளை அணிந்து கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கியிருந்தது.

★

# கொலையுண்டபோது தமது நிறுவனத்தின் 'ரீ - ஷேர்ட்'டுகளை அவர்கள் அணிந்திருந்தனர்

தில் படுக்குமாறு அவர்கள் கட்டளை இடப்பட்டிருக்கிறார்கள். ஒரே வரிசை. இருவர் மாத்திரம் தரித்து நின்ற வானொன்றுக்கு அருகில் குப்புற கிடத்தப்பட்டுள்ளனர். ஒருவேளை இவ்விருவரும் தப்பியோட முயன்றவர்களாக இருக்கலாம்.

படுகொலை செய்யப்பட்ட இவர்களில் பெரும்பாலானோர் 'ரீ ஷேர்ட்' அணிந்திருந்தார்கள். அவற்றில் அவர்கள் பணிபுரியும் நிறுவனத்தின் பெயர் பொறிக்கப்பட்டிருந் தது. ''அக்ஸன் கொன்றிலா பெய்ம்' என்பதே அவ்வாசகமாகும். ''பட்டினிக்கு எதிரான செயற்பாடு'' என்பது இதன் அர்த்தமாகும். இது பிரான்ஸின் தலைநகரான பாரிஸை தலை மையகமாகக் கொண்ட ஒரு மனிதாபிமான தொண்டு நிறுவனமாகும்.

இந்த வெள்ளை பங்களாதான், கொலையுண்டவர்களின் உள்ளூர் அலுவலகமாகும். ஓகஸ்ட் மாதத்தில் ஒரு நாள் இப்படுகொலைகள் அரங்கேற்றப்பட்டுள்ளன. சடலங்கள் மூன்று தினங்கள் வரை அப்புறப்படுத்தப்படவில்லை. அதேவேளை நகரை தத்தம் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவர, இராணுவவீரர்களும் தீவிரவாதிகளும் போராடிக்கொண்டிருந்தார்கள்.

கொலையுண்டோரின் சடலங்கள் உருக்குலைந்து கொண்டிருந்த சமயத்தில் உதவிகள் வந்தடைந்தன. ஒரு பிளாஸ்ரிக் நாற்காலி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்து நிரந்தர இடமின்றித் தவிக்கும் ஆசிரிய கலாசாலை வளங்களுடனும் கௌரவத்துடனும் சொந்த நியம் திரும்புமா?

*யாழ்ப்பாணக் குடாநாட்டினது கல்வி வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய பலாலி ஆசிரிய கலாசாலையின் மணிவிழா ஆண்டு இது.*

*பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்களை உருவாக்கி அவர்கள் ஊடாக பல சந்ததிகளைச் சேர்ந்த மாணவர்களின் கல்விக்கு ஊரமூட்டிய பெருமைக்குரியது இக்கலாசாலை.*

*குடாநாட்டின் கல்வித் தாய்களில் ஒன்றாக விளங்கிய இக்கலாசாலை, மக்களைப் போலவே இடம்பெயர்ந்து, வெவ்வேறு ஊர்களில் தங்க நேர்ந்த போதிலும் அதன்பணி தோல்வியில்லாமல் தொடர்கிறது. கலாசாலையின் மணிவிழாக் காலத்தையொட்டி நேற்று வெளியான கட்டுரை இன்று நிறைவுறுகிறது.*

### 1986 இல் புலம்பெயர்ந்தது கலாசாலை

1985இல் நாட்டின் சூழ்நிலை காரணமாக பலாலி இராணுவ முகாம் விரிவுபடுத்தப்பட்டது. படை நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டன. பலாலி ஆசிரியர் கலாசாலை செயற்பாடுகளில் தாதமமும், தடைகளும் ஏற்பட்டன. தொடர்ந்து தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் 03.03.1986இல் பலாலி கலாசாலை தனக்கே உரித்தான அந்த பலாலி மண்ணை விட்டு புலம்பெயர வேண்டியதாயிற்று

புலம்பெயர்வின் முதல் அங்கமாக இது "கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலை"யில் இயங்கலாயிற்று. 03.05.1987இல் அதிபர் பரமேஸ்வரன் ஓய்வுபெறவே திரு.என்.கனகேஸ்வரன் 15.12.1990 வரை அதிபராகப் பதவி வகித்தார். இவரின் காலத்தில் கத்தோலிக்கம் (1988), விஞ்ஞானம், கணிதம், விவசாயம் ஆகிய பாடநெறிகள் நடந்துள்ளன. இங்குதான் பலாலி ஆசிரியர் கலாசாலை அடிப்படை வசதிகளற்ற ஆசிரியர் கலாசாலை என்ற நிலையை முதன் முதலில் அடைந்தது.

## ஒரு மீள்பார்வை

விரிவுரைகள் கோப்பாய் மகாவித்தியாலயத்தின் ஒரு பகுதியில் இடம்பெற்றன. அலுவலகம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் இயங்கியது. விஞ்ஞான பயிற்சிகளுக்காக புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரிக்கும், விவசாய பயிற்சிகளுக்காக திருநெல்வெலி விவசாய பாடசாலைக்கும் போய் மாணவர்கள் பயிற்சி பெறவேண்டியதாயிற்று. ஆசிரிய மாணவர்களுக்கான முழுநேர வதிவிடப்பயிற்சி என்ற கொள்கையை கைவிடவேண்டியதாயிற்று. இக்காலத்தில் அதிபர், உபஅதிபரை தவிர 8 நிரந்தர விரிவுரையாளர்களும் 5 இணைக்கப்பட்ட விரிவுரையாளர்களும் பணியாற்றி உள்ளனர்.

1990.12.15இல் ந.கனகேஸ்வரன் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திரு.ஆர்.எஸ்.நடராஜா கலாசாலையின் அதிபரானார். இவரின் காலத்தில் கலாசாலை திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் ஒரு பகுதிக்கு (முன்னர் சைவ ஆசிரியர் கலாசாலை இயங்கிவந்த பகுதிக்கு) இடமாற்றம் செய்யப்பட்டது. (மறைந்த முன்னாள் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு.இரா.சுந்தரலிங்கம் அவர்களின் முயற்சி இதில் பெரும் பங்கு)

30.06.1994இல் திருமதி ரி.அரிராஜசிங்கம் அதிபரானார். இவரே கலாசாலையின் முதலாவது பெண் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலப் பகுதியில் நிதிப்பிரிவை கலாசாலையில் இயங்க வைக்க முடியாமையால் (பொருத்தமான கணக்காளர் இல்லாமையால்) நிதிப்பிரிவு (24.03.1995) வலயக கல்விப்பணிமனைக்கு மாற்றம் செய்யப்பட்டது.

### மட்டுவிலில் பலாலி ஆசிரிய கலாசாலை

1995களில் யாழ் தீபகற்பத்தில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு (இராணுவ நடவடிக்கை 'றிவிரச') காரணமாக மக்கள் அனைவரும் வடமராட்சி, தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்தனர். இதனால் 31.10.1995இல பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை மட்டுவில மகாவித்தியாலயத்தில் தற்காலிகமாகவேனும் இயங்கவைக்க வேண்டியதாயிற்று. நிலைமை சற்றுத் தணியவே 08.05.1996இல் திரும்பவும் யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயத்துக்குத் திரும்பியது.

08.08.1996இல் திரு.சோ.பத்மநாதன் அதிபராக அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டார். இவருடைய காலத்தில்தான் பழைய மாணவர்சங்கம் உருவாக்கப்பட்டது.

**கல்வி விருத்தியில் அக்கறை கொள்ளாத சமூகம் விரைவில் அழிந்துவிடும்**



அவரைத் தொடர்ந்து 14.09.1999இல் அதிபராக திரு.கு.சதாசிவமூர்த்தி அவர்கள் நியமிக்கப்பட்டார். கல்லூரியின் வரலாற்றில் மிக நீண்டகாலம் அதிபராகப் பணிபுரிந்தவர் என்ற பெருமையும் இவரையே சார்ந்ததாகும். இவர் காலத்திலேயே "கலாவதி" என்ற கலாசாலையின் வருடாந்தமலர் மாணவர் மன்றத்தால் வெளியிடப்பட்டது (இதற்கு முன்னைய காலத்தில் இது தமிழ்மன்றத்தினராலேயே வெளியிடப்பட்டது) தவிர சைவவிளக்கு (இந்துமன்றம்) Epoch (ஆங்கிலமன்றம்) ஒளிமலர் (கத்தோலிக்க மன்றம்) வணிக தீபம் (வணிகமன்றம்) போன்ற சஞ்சிகைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இக்காலத்தில் கணிதம், விஞ்ஞானம், றோமன கத்தோலிக்கம், விவசாயம், உடற்கல்வி, ஆரம்பப் பிரிவு முதலான பாடநெறிகள் நடந்ததுடன் 'நன்நீர்த்தேக்க நீர் உயிர்வள தொழில்நுட்பம்' என்ற புதிய பாடப்பரப்பில் (85) மாணவர்கள் பயிற்சிக்காக உள்வாங்கப்பட்டு இன்றுவரை பயிற்றப்பட்டு வருகின்றனர்.

பல ஆண்டுகள் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்திலும் அதனோடு இணைந்த பகுதிகளிலும் தற்காலிகமாக இயங்கி வந்த பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் செயற்பாடானது தங்கள் கல்வி நிர்வாகத்துக்கும் பாடப்புறச் செயற்பாடுகளுக்கும் இடையூறாக அமைந்துள்ளது எனக் கருதிய பாடசாலை நிர்வாகம் அதனை வேறு இடத்துக்கு மாற்றுமாறு 01.09.2003முதல் பாரியளவில் அழுத்தங்களைப் பிரயோகிக்கத் தொடங்கியது.

இதன் காரணமாக 01.01.2004 முதல் கலாசாலையானது ஆடியபாதம் வீதியில் உள்ள கட்டடத்தொகுதி ஒன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இந்த இடத்தில் முன்னர் கல்வி திணைக்களத்தின் "கணித, விஞ்ஞான, வள நிலையம்" இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது.

### நிரந்த இடமின்றித் தவிக்கிறது

இடநெருக்கடி காரணமாக இச்சிறிய கட்டடத் தொகுதியுடன் அதற்கு அருகில் (2005) உள்ள ஒரு தனியார் வீட்டையும் பயன்படுத்த வேண்டியதாயிற்று. இதனைக் காரணம் காட்டி கல்வியமைச்சு இதனை மூடிவிடவும் அதிபரை மாற்றி கோப்பாய் ஆசிரிய கலாசாலையுடன் (யாழ்ப்பாணம் ஆசிரியர் கலாசாலை என்ற பெயரில்) இரு கலாசாலைகளையும் இணைத்து கொள்ளவும் முற்பட்டது. (ஆயினும் இந்த முயற்சி இன்றும் கைவிடப்பட்டதாகவும் இல்லை) இதனால் கலாசாலையை மல்லாகத்திற்கும் இணுவிலுக்கும் மருதனார்மடத்திற்கும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் பரியோவான் அக்கடமிக்கும் வேலணைக்கும் மாற்றுவதற்காக பல்வேறு மட்டத்தினலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவை திருப்திகரமான முறையில் தொடரப்பட்டதாகத் தெரியவில்லை.

03.02.2006இல் அதிபர் திரு.கு.சதாசிவமூர்த்தி அவர்கள் சேவை முதிர்வு காரணமாக ஓய்வுபெற்றதை தொடர்ந்து திரு.த.காங்கேசபிள்ளை அவர்கள் அதிபர் பொறுப்பினை ஏற்றார். மிக இக்கட்டான காலகட்டத்தில் கலாசாலையை நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு இவருக்கு உண்டு.

1977றகு பின் கலாசாலையில் பயின்ற ஆசிரிய மாணவர் எண்ணிக்கை

| ஆண்டு | எண்ணிக்கை | ஆண்டு | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 77/78 | 453 | 91/92 | 236 |
| 78/79 | 184 | 93/94 | 124 |
| 79/80 | 157 | 94/95 | 20 |
| 79/81 | 174 | 95/96 | 18 |
| 80/82 | 248 | 97/98 | 34 |
| 81/83 | 323 | 98/99 | 142 |
| 82/83 | 292 | 99/2000 | 290 |
| 83/84 | 300 | 2000/2001 | 153 |
| 85/86 | 53 | 2001/2002 | 182 |
| 86/87 | 62 | 2002/2003 | 263 |
| 87/88 | 55 | 2003/2004 | 205 |
| 88/89 | 144 | 2005/2006 | 145 |
| 89/90 | 26 | 2006/2007 | 148 |
| 90/91 | 285 | | |

நாட்டில் நிலவும் அமைதியற்ற சூழல் காரணமாக கலாசாலைக்கான பொருத்தமான இடத்தை தெரிவுசெய்து அதனை இடமாற்றம் செய்யவேண்டிய தேவை உடன் இல்லாவிட்டாலும் கூட தற்போது (பழைய) முத்துத்தம்பி பாடசாலையிலும் 3 தனியார் வீடுகளிலும்) இயங்கும் கலாசாலையின் கல்விச் செயற்பாடுகள் ஆசிரிய மாணவர்களின் கல்வி வளர்சிக்கு போதுமானதல்ல என்ற கருத்து கல்வியியலாளரிடையே இன்னும் இருக்கத்தான் செய்கின்றது.

பலாலி ஆசிரியர் கலாசாலை தனக்கு உரிய கௌரவத்துடனும்,வளத்துடனும் மீட்கப்படுமா? அது தன் சொந்த நிலத்திற்கு மீண்டும் திரும்புமா? என்ற ஏக்கம் ஒவ்வொரு பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களின் நெஞ்சங்களிலும் இன்றும் இருக்கத்தான் செய்கின்றது.

2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசின் "தேசிய அரசினர் கல்விக் கொள்கை"யின் பிரகடனத்தில் 1.6இல் குறிப்பிடப்பட்டுள்ள கூற்று இங்கு கவனிக்கப்பட வேண்டியுள்ளது.

"ஒரு நிறுவன வகைக்கும் இன்னொரு நிறுவன வகைக்கும் இடையே செலவின அளவில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதாவது தேசிய கல்வியியற் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், மற்றும் தேசிய கல்வி நிறுவகம் மூலம் நடத்தி வரும் கற்கைகளுக்கான அலகுச் செலவுகளைவிட பாரிய அலகுச செலவினங்கள் ஆசிரிய கல்லூரிகளில் நிலவின. இதன்படி குறிப்பிடப்பட்டுள்ள சேவையில் சேர்ந்த பின்பு ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக பெருந்தொகைப்பணம் செலவிடுவதால் கூடிய விரைவில் இம்முறை நிறுத்தப்பட வேண்டும்" என்று கூறப்பட்டுள்ளது.

### கல்வி விருத்தியில் அக்கறை கொள்ளாத சமூகம் விரைவில் அழிந்துவிடும்

இந்நிலையில் கலாசாலையின் மூத்த அதிபர்களுள் ஒருவரான திரு.ஆர்.எஸ்.நடராஜா 1999இல் 'கலாவதி'யில் கூறிய கருத்து இக்காலத்திற்கும் பொருத்தமானதாகவே அமைகின்றது. "தமிழ் பேசும் மக்களின் கல்வி முன்னேற்றத்துக்கு பலாலி ஆசிரிய கலாசாலையின் பங்களிப்பு முக்கியமாக இருந்து வந்துள்ளது. இக் கலாசாலையின் பணி சமூக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. எனினும் இதன் சீரான செயற்பாட்டின் முக்கியத்துவத்தை சமூகம் முழுமையாக உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை. கலாசாலைக்குத் தற்காலிகமாகவேனும் ஒருவசதியான இடத்தை ஒதுக்கித் தருவதில் கல்வியை மதிக்கும் தமிழ்ச் சமூகம் போதிய அக்கறை காட்டுவதாயில்லை. ஒரு சிலரின் முயற்சிகளுக்குள் கூட சமூகம் ஆதரவு தராமை வருந்தத்தக்கது. கலாசாலைப பிரச்சினை. ஒரு சமூக முன்னேற்றப் பிரச்சினை இதனை உணர்ந்து நாம் உரியமுறையில் செயல்பட்டு இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும். நமது ஊதாசீனம் கலாசாலைக்கு இங்கு ஏற்ற இடமில்லை எனக்கூறி இதனை மூடிவிடுவதற்கே வழி வகுப்பதாய் இருக்கும். மூடப்படின் கல்வி விருத்திக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். "கல்வி விருத்தியில் அக்கறை கொள்ளாத சமூகம் விரைவில் அழியும்" என்ற கல்வியியலாளர் சிந்தனை நமக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கட்டும்". ✱

**ஜோன் குயின்ரஸ் M.A.**
விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை.


## கண்ணீர்ப் பூக்கள்



எமது சங்கத்தின் நீண்டகால செயலாளரான
ச.தவசீலன் அவர்களது தந்தை
"பழமொழிச்செல்வர்"
**க.சத்தியானந்தசிவம்**
அவர்களது வாழ்வின் நிறைவுச்செய்தி கேட்டு
மிகவும் மனம் வருந்துவதுடன் அவர்களது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
(62275) **வர்த்தக சமூகம், ஈச்சமோட்டை.**

## T.C.T. Beauty Centre

மணப் பெண் அலங்காரம் (Facial, Eyebrow, Threading, Waxing, Cake Icing) போன்ற அழகு சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவும் தொ.பே.0776917697

தேசிய இளைஞர் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத் தின் ஆதரவுடன் தியாகி அறக்கொடை நிறுவனம் நடத்தும் அழகுக் கலைப் பயிற்சிநெறி (Cake Icing, Cookery, Flower Making, Facial, Hair Style, Bridal Dressing, Fabric Painting) ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

பயிற்சிக்காலம் 4 மாதம், பயிற்சி முடிவடைந்ததும் சான்றிதழ் வழங்கப்படும்.
இணைய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**தியாகி அறக்கொடை நிறுவனம்**
நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.0776917697
(62268)

## ஏழாலை வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

ஏழாலை வசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் அம்மா அவர்களின் அன்புத் தாயார் அவர்கள் இறைவனடி சேர்ந்த ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு 30-06-2007முற்பகல் 9.30 மணிக்கு விசேட பூஜை பிரார்த்தனை, பக்தர்களுக்கு நினைவுப் பாமாலை வழங்கல், மதியபோசனம் ஆகியன இடம்பெற்று அம்மையாரின் நினைவாகப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றிய, வெற்றிபெற்ற, மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் இடம்பெறும். அனைவரும் வருகை தந்து அனைத்து நிகழ்வுகளிலும் பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தேவஸ்தானம்.**
(61906)

உ
வண்ணார்பண்ணை காட்டுத்துறை
அருள்மிகு ஸ்ரீ அம்பலவாண
விக்கினேஸ்வரப் பிள்ளையார் கோயில்
**மஹோற்சவம் - 2007**

**02.07.2007 திங்கட்கிழமை**
முற்பகல் 11 மணி கொடியேற்றம்
**06.07.2007 வெள்ளிக்கிழமை**
பிற்பகல் 4 மணி தண்டிகைத் திருவிழா
**09.07.2007 திங்கட்கிழமை**
பிற்பகல் 4 மணி சப்பரத் திருவிழா
**10.07.2007 செவ்வாய்க்கிழமை**
முற்பகல் 10 மணி தேர் உற்சவம்
**11.07.2007 புதன்கிழமை**
முற்பகல் 10 மணி தீர்த்தோற்சவம்
பிற்பகல் 4 மணி கொடியிறக்கம்
**12.07.2007 வியாழக்கிழமை**
பிற்பகல் 4 மணி சண்டேஸ்வரர் உற்சவம்
(62273)

அடியார்கள் வருக! அருள் பெறுக!
**ஆலய அறங்காவலர்கள்**

## விற்பனைக்கு

புதிதாக அமைக்கப்பட்ட 6 அடி ம பிரிஜ் விற்பனைக்குண்டு
தொடர்பு: பிள்ளையார் மில், 202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (61818)

## விற்பனைக்கு

S.L.T.கேபிள் லைன் தொலை பேசி உடன் விற்பனைக்குண்டு
தொடர்பு: 0776 142615, 077 3500882
(62277)

## ஒத்துமாறல்

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் கடமையாற்றுபவர் யாழ்ப்பாணத்திற்கு ஒத்து மாற விரும்புகின்றார்.
(62261)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அண்மையில் யாழ்.மாநகராட்சி மன்றத்தின்
சைவசமய விவகாரக் குழுவினரால்
நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான
பரிசளிப்பு வைபவத்தில்
எமது பாடசாலை மாணவி
**செல்வி கார்த்திகா சிவப்பிரகாசம்**
அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுத் தங்கப்பதக்கம் பெற்றமைக்காக எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அவர் மேலும் பலதுறைகளிலும் முன்னேறவேண்டுமென இறைவன் ஆசியை வேண்டுகின்றோம்.

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, சாவகச்சேரி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
(62264)

உ
சிவமயம்
யாழ்ப்பாணம் புதிய விஞ்ஞானக் கல்வி நிலையத்தின்
அனுசரணையுடன் நடைபெறும்
**அருணகிரிநாத சுவாமி விழா - 2007**

இடம்:- சந்நிதியான் ஆச்சிரமம்
காலம்:- நாளை (29.06.2007) வெள்ளிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
சிறப்புரை :- செஞ்சொற்செல்வர்
**ஆறுதிருமுருகன்**
விசேட நிகழ்வு :- திருப்புகழிசை

**வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் ஞானச்சுடர் மாத வெளியீடு**

வெள்யீட்டுரை :- சிவ ஆறுமுகஸ்வாமி J.P.
மதிப்புரை:- செற்சொற்செல்வன்
**இரா.செல்வவடிவேல்**

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

செல்வச்சந்நிதி, தொண்டைமானாறு
சந்நிதியான் ஆச்சிரமம்.
(சி/52763)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பிரிட்டன் பிடியை இறுக்குவது ஏன்?

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களை சர்வதேசம் கையாளும் முறைமைகள் குறித்து இப்பத்தியில் பல தடவைகள் குறை கூறியும் விசனம் தெரிவித்தும் வந்துள்ளோம்.

அந்த வரிசையில் இப்போது ஈழத் தமிழர் விவகாரம் குறித்து பிரிட்டன் நடந்துகொள்ளும் புதிய போக்குக் குறித்து குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

லண்டனில் உள்ள புலிகளின் பொறுப்பாளர் சாந்தன் நீண்ட காலம் அங்கு தங்கியிருப்பவர். தமது பழைய - வழமையான- நடவடிக்கைகளையே தொடர்ந்தும் மேற்கொண்டுவந்த அவரும், அவரது உதவியாளர் ஒருவரும் அங்கு கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். ஈழத் தமிழர்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த சில அமைப்புகள் பிரித்தானிய அதிகாரிகளால் குடையப்பட்டிருக்கின்றன.

லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் சில புல்லுருவிகளின் திட்டமிட்ட சதிப்பின்னலும் பிரிட்டனின் இந்தக் கடும் போக்கின் பின்னணியில் விரிந்துகிடந்தாலும், இந்தச் செயற்பாட்டின் மூலமாக பிரிட்டன் ஏதோவொரு கருத்தை வன்னிக்குத் தெரியப்படுத்த முனைகின்றது என்றே அவதானிகள் பலரும் கருதுகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்து, அதனைத் தடைசெய்யப்பட்ட இயக்கமாக பிரிட்டன் அறிவித்திருந்த போதிலும், இப்போது வரை புலிகளுக்கு எதிரான விவகாரங்களில் மிக மோசமான கடும் போக்கை பிரிட்டன் வெளிப்படுத்தியதில்லை. விடயங்களை இறுக்கியதில்லை. விட்டுப் பிடித்தே வந்திருக்கின்றது. வெள்ளைக்காரத்தனத்தோடு தாராளமாகவே சகிப்புத் தன்மையைக் காட்டி வந்திருக்கிறது.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்டன் பாலசிங்கம் தனது மறைவு வரை லண்டனிலேயே தனது துணைவியாருடன் தங்கியிருந்து, இயக்கத்தின் சார்பில் பிரிட்டன் உட்பட சகல சர்வதேச நாடுகளுடனும் தொடர்பாடல்களை மேற்கொண்டு வந்திருக்கின்றார். வருடந்தோறும் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரைக்கு விளக்கம் அளிக்கும் - அர்த்தம் கூறும் - புகழ்பெற்ற பிரசார உரையை அங்கிருந்தே அவர் ஆற்றி வந்திருக்கிறார். இலங்கை அமைதி முயற்சிகளுக்காக கொழும்புக்கும் ஏனைய இடங்களுக்கும் லண்டனில் உள்ள தமது இல்லத்திலிருந்து தான் அவர் சென்று வந்தார். இந்தச் செயற்பாடுகளில் எல்லாம் அவருக்கு வலது கையாக - பக்கத்துணையாக - இருந்து உதவி வந்த லண்டன் பொறுப்பாளர் சாந்தன் இப்போது, அன்டன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் - சுமார் ஆறு மாதங்கள் கழித்து - பிரிட்டிஷ் அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

பிரிட்டனின் இந்தத் திடீர் 'புலி எதிர்ப்புப் பாய்ச்சல்' குறித்து பல்வேறு காரணங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவற்றில் எது சரியானது என்பதை இப்போது கூற முடியாவிடினும் அவை குறித்து இன்றைய சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்வது பொருத்தமானது.

சாந்தனைக் கைதுசெய்ததன் மூலம் பிரிட்டன் எதை வெளிப்படுத்த - செயற்படுத்த முனைகின்றது? அவதானிகள் வெளியிடும் கருத்துக்களை வரிசைப்படுத்திப் பார்ப்போம்.

ஒன்று - இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில், இலங்கை அரசுத் தரப்பு நடந்துகொள்ளும் விதம் மற்றும் போக்குக் குறித்து பிரிட்டன் கடும் அதிருப்தியும், எரிச்சலும், விசனமும் அடைந்திருக்கிறது. அதன் காரணமாக இலங்கை அரசு தொடர்பாகக் காத்திரமான சில அழுத்த - நெருக்குவார - நடவடிக்கைகளைப் பகிரங்கமாக முன்னெடுக்க பிரிட்டன் தீர்மானித்துத் தயாராகி வருகிறது. அத்தகைய நடவடிக்கைகளை பிரிட்டன் ஒருதலைப்பட்சமாக எடுக்கும்போது இறைமையுள்ள ஒரு நாட்டுக்குப் பாதகமாகவும் 'பயங்கரவாத' அமைப்பான புலிகளுக்கு சாதகமாகவும் அது செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு சர்வதேச ரீதியில் பிரிட்டனுக்கு எதிராக எழுப்பப்படலாம். அதை முற்கூட்டியே சமாளிக்கும் நோக்கில் ஒரு புறம் சாந்தன் போன்றோரைக் கைது செய்து புலிகளை இறுக்குவதாகக் காட்டிக் கொண்டு, மறுபுறம் இலங்கை அரசு மீது தனது தாக்குதல் கணையைத் திருப்பிவிட பிரிட்டன் தயாராகிறது. பிரிட்டனின் செயற்பாட்டை நியாயப்படுத்தும் - அதில் நம்பிக்கை வைக்கும் - அவதானிகள் சிலர் இப்படி எதிர்வு கூறுகின்றனர்.

மற்றது - விடுதலைப் புலிகளின் தொடர்பு அல்லாத தமிழ்ப் பிரமுகர்கள் குழு ஒன்று இப்போது லண்டனில் ஈழத் தமிழர்களுக்காக - சுயாதீனமாக - குரல் எழுப்பத் தொடங்கியிருக்கின்றது. பிரிட்டிஷ் அரசுத் தலைமையில் மாற்றம் ஏற்பட்டு வரும் இச்சமயத்தில் அத்தலைவர்களோடு பல சுற்று சந்திப்புகள், கலந்துரையாடல்கள், தொடர்பாடல்கள் பேன்றவற்றை இந்தப் பிரமுகர்கள் குழு முன்னெடுத்து வருகின்றது. அக்குழுவுக்கு மட்டும் முக்கியத்துவம் தரும் வகையில், புலிகளை ஓரங்கட்டி - வழமையாகத் தான் மேற்கொள்ளும் பிரித்தாளும் தந்திரக் கைவரிசையை இவ்விடயத்திலும் காட்டி - செயற்பட பிரிட்டன் முயல்கிறது. அதன் பெறுபேறே லண்டனில் புலிகளை அடக்கும் வகையிலான சாந்தனின் கைது என்று விளக்குவோருமுளர்.

மூன்றாவதாக வேறு ஒரு காரணமும் கூறப்படுகின்றது. பிரிட்டிஷ் பிரதமர் பதவி ரொனி பிளேயரிடமிருந்து கோர்டன் பிறவுனுக்குக் கைமாறும் சூழலில் அதிகார மாற்றம் முழு அளவில் ஏற்படுவது போல அரசின் கொள்கைப் போக்கும் முழுதாக மாறுகின்றது. 'பயங்கரவாதிகளான' புலிகளை ஒதுக்கி, மிதவாதிகளாகத் தங் களைக் காட்டிக்கொண்டு செயற்படும் லண்டன் தமிழ்ப் பிரமுகர் கள் குழுவை அங்கீகரித்து, அதனுடன் தொடர்பாடலை மேற் கொள்ள விரும்பும் புதிய பிரிட்டிஷ் அரச நிர்வாகத்தின் விருப்பை இந்த நடவடிக்கை வெளிப்படுத்துவதாக விளக்கம் தெரிவிக்கப் படுகின்றது.

நான்காவதாக மற்றொரு காரணமும் கூறப்படுகின்றது.

இஸ்ரேல் - பாலஸ்தீன விவகாரத்தில் முதலில் சமரசம் செய்யும் நடுநிலையாளர்களாக நோர்வேயே தலையிட்டது. அதனடிப்படையிலேயே பாலஸ்தீனத் தலைவர் அரபாத் இஸ்ரேலுடன் ஒஸ்லோ ஒப்பந்தத்தைச் செய்தார். ஆனால் காலப்போக்கில் உலக ஒழுங்கு மாறிய நிலையில், நோர்வேயை ஒதுக்கிவிட்டு, மத்திய கிழக்குப் பிரச்சினையில் தீர்வுப் பாதையைத் தீர்மானிக்கும் அதிகார சக்தி என்ற மேலாதிக்கப் பொறுப்பை அமெரிக்காவும், பிரிட்டனும் பிடுங்கிக் கொண்டு விட்டமையைக் காண்கிறோம்.

இதே அதிகாரப் பாணியை இலங்கையிலும் செலுத்துவதற்கு பிரிட்டன் முழு மூச்சில் விரும்புகிறது. ஒஸ்லோவின் அனுசரணைப் பணி தள்ளாடும் இச்சூழலில் சமாதான முயற்சி என்ற கூடாரத்துக்குள் பிரிட்டன் என்ற ஒட்டகம் தலையை நுழைக்க முயல்கிறது. அதற்கு பச்சைக்கொடி காட்ட மஹிந்தரின் அரசும் தயாராகவுள்ள நிலையில், மறு தரப்பான புலிகள் பிடிகொடுக்காமல் விலகி நிற் கிறார்கள். ஆக, புலிகளை வழிக்குக் கொண்டு வந்து, தன்னை இப்பிரச்சினைக்குள் நுழைக்க வழிகாட்டும் நடவடிக்கையாகவே சாந்தனைக் கைது செய்து - புலி எதிர்ப்பு நடவடிக்கைகளை இறுக்கி - வன்னிக்குச் சமிக்ஞை காட்டுகிறது பிரிட்டன் என்று அர்த்தம் கற்பிப்போரும் உள்ளனர்.

பிரிட்டனின் இத் திடீர் போக்கு மாற்றத்தின் பின்னணி என்னவென்பது காலப்போக்கிலேயே அம்பலமாகும் - பகிரங்கமாகும் - என்பது திண்ணம்.

# மேற்குலக நாடுகளின் நிதி உதவிகளைப் பெற அரசாங்கம் அந்நாடுகளில் தீவிர பிரசாரம்

## உதவிகளை வெட்டினால் பயங்கரவாதம் பலம் பெறும் என்று ஜி.எல்.பீரிஸ் வாதம்

வாஷிங்ரன், ஜூன் 28

மேற்குலக நாடுகள் இலங்கைக்கு வழங்கி வரும் நிதி ஆதாரங்களை தொடர்ந்து வழங்கும்படி செய்வதற்கும், நிதி உதவிகள் நிறுத்தப்பட்டால் பயங்கர வாதத்தின் வளர்ச்சிக்கு உதவியதாகவே முடியும் என்ற வகையிலும் இலங்கையின் சர்வதேச வர்த்தக அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்குலக நாடுகளில் பெரும் பிரசாரம் ஒன்றை மேற்கொண்டு வருகிறார்.

வாஷிங்ரனில் அவர் நேற்றுமுன்தினம் நடத்தியுள்ள செய்தியாளர் மாநாட்டில், உதவி வழங்கும் மேற்குலக நாடுகள் அந்த உதவிகளை வெட்டிக் குறைத்தால் அது ஒரு பெரும் துன்பகரமான தவறாகவே இருக்கும் என்று தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய வேறு காரணங்களுக்காகவும் ஏற்கனவே பிரிட்டன், ஜேர்மனி மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகள் இலங்கைக்கு வழங்கிவந்த உதவிகளில் குறிப்பிட்ட பகுதிகளை வெட்டிக் குறைத்துள்ளன. வேறு பல நாடுகளும் நிதி ஆதாரங்களைக் குறைப்பதற்கும் ஆலோசித்து வருவது தெரிந்ததே.

அமெரிக்காவும் அதன் 'மில்லேனியம் சலஞ் எக்கவுண்ட' என்ற உதவித் திட்டத்தின் கீழ் இலங்கையை இணைத்துக்கொள்ள மறுத்துள்ளது. இந்த நிதி கிடைக்கு மானால் இலங்கைக்கு மிகவும் தேவைப்படும் அதன் உள் கட்டமைப்புக்களை விருத்திசெய்து கொள்ள பல மில்லியன் டொலர்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### பயங்கரவாதம் பலம் பெறவே உதவும்

இலங்கைக்குக் கிடைக்க வேண்டிய வளங்களை வெட்டிக் குறைப்பதன் மூலம் ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று எவர் வாதித்தாலும் அவர் வேண்டுமென்றே இல்லாவிட்டாலும் புத்திசாதுர்யமற்ற விதத்தில் பயங்கரவாதம் பலம் பெறுவதற்கே உதவுகிறார் என்று ஜி.எல். பீரிஸ் கூறினார்.

இந்த சக்திமிக்க பலமான செய்தியை அமெரிக்காவின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாம் எடுத்துரைத்திருப்பதாகவும் பீரிஸ் தெரிவித்தார்.

அமெரிக்க அதிகாரிகளுக்கு இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக விளக்கமளித்துள்ள அமைச்சர், அமெரிக்க அரசு தனது சட்ட சபைகள் மற்றும் பொதுமக்களின் நெருக்குதல்களுக்குள்ளாகி அதற்கு பதில் அளிக்க வேண்டியிருப்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியும். அதேவேளை எமது நிலையையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். - என்று அவர் கேட்டுள்ளார். (அ-ப)

# ஐ.தே.கட்சி எம்.பிக்கள் இருவரை தம்பக்கம் இழுக்க அரசு முயற்சி

கொழும்பு, ஜூன் 28

தென்மாகாணத்தைத் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர் விரைவில் அரசுத்தரப்புடன் இணையவுள்ளனர். இதற்கான பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்று தகவல் வெளியாகி உள்ளது.

தென்மாகாணத்தைச் சேர்ந்த ஐ.தே.க. எம்.பி ஒருவரும், ஐ.தே.கவைச் சேர்ந்த இளையதலைமுறை எம்.பி. ஒருவருமே வெகுவிரைவில் அரசுடன் இணையவுள்ளனர். இதற்கான பேச்சுகள் இப்போது நடைபெறுகின்றன. அமைச்சர் பதவியைக் கொடுத்தாவது அவர்களை அரசுடன் இணைத்துக் கொள்வோம் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

நாட்டின் இன்றைய நிலையை விளக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுப் பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அங்கு அமைச்சர் தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

ஐ.தே.கட்சியிலிருந்து மேலும் 20 எம்.பிக்கள் அரசுடன் இணைய விரும்பம் தெரிவித்துள்ளனர். இதன் முதற்கட்டமாக தென்பகுதியைச் சேர்ந்த ஐ.தே.க. எம்.பி. ஒருவருடனும் இளைய தலைமுறை எம்.பி. ஒருவருடனும் இப்போது பேச்சுகள் நடைபெறுகின்றன. இவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்களை வழங்கியாவது அரசுடன் இணைத்துக் கொண்டு அரசைப் பலப்படுத்துவோம் - என்றார். (சி)

# நூறு அடையாளம் காணப்படாத சடலங்கள் கடந்த ஆறு மாதகாலங்களில் மீட்கப்பட்டன

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் கடந்த ஆறுமாதகாலங்களில் மட்டும் நூறு அடையாளம் காணப்படாத சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன என்று பொலிஸாரின் தகவல்களை அடிப்படையாக வைத்து செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

- இவ்வாறு மீட்கப்பட்ட சடலங்களில் பெரும்பாலானவை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களுடையதாகும்.

இவ்வாறான கொலைகள் வேறு இடங்களில் செய்யப்பட்ட பின்னர் மற்றுமோர் இடத்தில் சடலங்கள் வீசப்பட்டவை.

இதேவேளை, கடந்த வருடம் 147 அடையாளம் காணப்படாத சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. இச்சடலங்களில் 27 பெண்களுடையது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 770 அடையாளம் காணப்படாத சடலங்கள் மீட்கப்பட்டன. இவற்றில் 153 சடலங்கள் பெண்களுடையவை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# திறந்த பல்கலைக்கழக கல்வி டிப்ளோமா ஆசிரியருக்கு அழைப்பு

யாழ்.திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய அலுவலகத்தில், பட்டப் பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறி பயின்ற ஆசிரியர்களை இன்று பிற்பகல் 2 மணிக்கு யாழ்.அலுவலகத்தில் சமுகமளிக்குமாறு பிராந்திய இயக்குநர் ஆ.ஞானேந்திரன் கேட்டுள்ளார்.

இந்தப் பயிற்சி நெறியை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்ட கடிதம், ஆசிரியராக நியமனம் பெற்ற கடிதம், தேசிய அடையாள அட்டைப் பிரதி ஆகியவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

# கற்கோவளத்தில் மீட்கப்பட்ட சடலங்கள் அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடமராட்சி, கற்கோவளம் கடற்கரைப் பகுதியில் உள்ள இராணுவ முகாமுக்குள் உட்புகுவதற்கு முயன்றவேளை சுட்டுக்கொல்லப்பட்ட தாகக் கூறப்படும் இருவரின் சடலங்களும் அரச செலவில் நேற்றுமுன்தினம் அடக்கம் செய்யப்பட்டன.

பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த இச் சடலங்கள் உரிமை கோரப்படாத நிலையில் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன. (அ-1)

# சட்டவிரோத மின்சாரம் பெற்ற 6 பேருக்கு தலா ரூ. 15, 000 அபராதம்

வடமராட்சியில் அல்வாய், கற்கோவளம் பகுதியில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஆறுபேருக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பொலிஸாரின் உதவியுடன் மின்சார சபையினர் குறிப்பிட்ட பகுதியில் நேற்று சோதனை நடத்தினர். அப்போது சட்டவிரோத மின்சார விநியோகம் பெற்ற அறுவர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் அறுவரும் நேற்று பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிவான், எதிர் காலத்தில் இப்படியான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என எச்சரித்து விடுவித்தார். (அ-1-202)

# 'த சண்டே லீடர்' ஆசிரியருக்கு வழக்குச் செலவாக ரூ. 1 1/2 லட்சம் செலுத்த அமைச்சருக்கு உத்தரவு

## கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூன் 28

'த சண்டே லீடர்' ஆங்கிலப்பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவிற்கு வழக்குச் செலவாக ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா நிதியினை செலுத்துமாறு வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் செவ்வாய் அன்று உத்தரவிட்டது.

பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க மற்றும் ஊடகவியலாளர் பிறற்றிக்கா ஜேம்ஸ் ஆகிய இருவருக்கும் எதிராக வெளிவிவகார அமைச்சர் தாக்கல் செய்தமனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது கொழும்பு மாவட்ட நீதிவான் அருண சிறி ரணசிங்க இந்த உத்தரவைப்பிறப்பித்தார்.

மனு பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மனுதாரரான வெளிவிவகார அமைச்சர் நீதிமன்றில் ஆஜராகி இருக்கவில்லை. அவர் வெளிநாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் என்று அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி நீதிவானிடம் தெரியப்படுத்தினார்.

வழக்கு விசாரணையின் போது பிரதிவாதியின் தரப்பினருக்கு- அசௌகரியம் ஏற்படுவதன் காரணமாக மனுதாரர் வழக்கு விசாரணைக்கு ஆஜராகாத நிலையில் செலவுத் தொகையை செலுத்தவேண்டும் என நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை, கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13ஆம் திகதியும் லசந்த விக்கிரமதுங்கவுக்கு 30 ஆயிரம் ரூபாவை வழக்குச் செலவு தொகையாக செலுத்த வேண்டும் என அமைச்சர் ரோகித போகொல்லாகமவுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அந்த வழக்குச் செலவுத் தொகை இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என்று லசந்த விக்கிரம சிங்க சார்பாக ஆஜ ரான சட்டத்தரணி நீதிவானுக்குத் தெரியப்படுத்தினார். (சி)

## நாளை

ஆனி - 15 வெள்ளிக்கிழமை
29.06.2007
திதி : சதுர்த்தசி முன்னிரவு 07.35
நட்சத்திரம் : கேட்டை
பி.ப. 05.07
சுபநேரம் : 05.56 - 07.26
இராகுகாலம் : 10.26 - 11.56

# முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

மாகியப்பிட்டி ஜே/144 கிராம அலுவலர் பிரிவில் முதியோர் சங்கம் ஒன்று கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இப் பகுதியிலுள்ள கண்பார்வை குறைந்தவர்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் லயன்ஸ் கழகங்கள் ஆகியவற்றின் அனுசரணையை பெற்று இலவச கண் பரிசோதனை, கண் பார்வை குறைந்தவர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடி வழங்குதல், 65 வயது கடந்தவர்களுக்கு முதியோருக்கான அடையாள அட்டையை பெற்றுக் கொடுத்தல் ஆகிய வற்றை மேற்கொள்வதென்று அங்குரார்ப் பண கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (1-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாகாணசபை முதல்வர்கள் தீர்மானம்

# பிற மாகாணத்தில் இருந்து வரும் பொருள்களுக்கு வரி விதிக்கப்படும்!

## போர்ச் செலவுகளின் பிரதிபலிப்பு இது!!

ஒரு மாகாணத்திலிருந்து இன்னொரு மாகாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படும் பொருள்களுக்கு வரிவிதிப்ப தென்று மாகாண சபை முதல் அமைச்சர்களின் மன்றம் தீர்மானித்துள்ளது.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டு வந்த நிதி ஆதாரங்களை 50 வீத அளவில் குறைத்து விடுவதற்கு அரசாங்கம் தீர் மானித்திருக்கின்றது. அதனால் ஏற்படும் நட்டங்களை ஈடு செய்வதற்காக இவ்வாறு வரி அறவிடுவதற்கு முதல் அமைச்சர்கள் முடிவு செய்துள்ளனர்.

கடந்த வாரக் இறுதியில் எம்பிலிப் பிட்டியவில் நடைபெற்ற முதலமைச்சர்க ளின் மன்றக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அரசாங்கம் நிதி ஆதாரங்களை போர்ச் செலவுகளைக் காரணங்காட்டி வெட்டிக் குறைப்பதை எதிர்த்து ஏற்கனவே மேல் மாகாண சபை ஒரு தீர்மானத்தை நிறை வேற்றியிருந்தது. இத்தீர்மானத்தை சபையிலுள்ளசகலகட்சிகளும்ஆதரித்திருந்தன.

### பதில் அதிபர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

பதில் கடமைபுரியும் கல்விப் பணிப்பா ளர்களையும் பதில் அதிபர்களையும் நிரந் தரமாக்கு வதென்றும் சகல மாகாணங் களிலும் தனியார் கல்வி நிலையங்களுக் கான சாஸனம் ஒன்றை நடைமுறைப்படுத் துவதென்றும் முதலமைச்சர்கள் மன்றம் முடிவெடுத்தது.

### பாடசாலைகள் பற்றிய கொள்கை

பாடசாலை தொடர்பாக புதிய கொள்கையொன்றை அறிவிக்கும்படி யும் முதலமைச்சர்கள் மன்றம் இன் னொரு தீர்மானத்தின் மூலம் அரசாங் கத்தைக் கேட்டுக்கொண்டது. (அ-ப)

---

## ஐ.நா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.நா.அதிகாரி நேற்றுமுன்தினம் அர சாங்க அதிபர் கே.கணேசைச் சந்தித்து சிவில் நிர்வாகம் குறித்து விரிவாகக் கேட் டறிந்தார்.

வெளிநாட்டு, உள்நாட்டு அரச சார் பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற் றும் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதி கள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரை யாடினார்.

ஐ.நாவின் சமாதான செயலகத்தின் ஊடாக இலங்கைக்கு செய்ய வேண்டிய பணிகளை இனம் காண்பதே போயர் ரெயினரின் விஜயத்தின் நோக்கம் என்று அறியவந்தது.

அந்த வகையில் குடாநாட்டுக்குத் தேவையான பணிகளை நேரில் கண்டறி யுமுகமாக அவர் அங்கு வந்திருந்தார் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இவருடன் இலங்கைச் சமாதானச் செயலகத்தின் அதிகாரி ரோகித அத்துக் கொறளவும் வந்திருந்தார். (அ-1)

---

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்தார்.

இதற்கு இணக்கம் தெரிவித்த தளபதி அவ்வாறே ஊரடங்கு நேர நீடிப்பை நடை முறைக்கு கொண்டுவருவதாக ஊறுதிய ளித்தார் என்று அரச அதிபர் தெரிவித்தார்.

ஆலய உற்சவ காலமானதால் இரவு 8 மணிக்குப் பின் ஊரடங்கை நடைமுறைப் படுத்தும்படி நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சார்ய சுவாமி கள் கோரிக்கை விடுத்திருந்தமை தெரிந் ததே.

இதேவேளை -

நேற்றிரவு 7 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்கு இன்று அதிகாலை 4.30 மணிக்கு நீக்கப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (அ-1)

---

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கொல் லப்பட்டுள்ளனர். இழப்புக்களுடன் இராணுவத் தினர் அப்பகுதியிலிருந்து பின்வாங்கி ஓடி னர்.

இதில் இராணுவத்தினரிடம் இருந்து பி.கே.எல்.ஜி.ரக துப்பாக்கி -01, ரீ-56ரக துப்பாக்கிகள் - 2, தொலைத்தொடர்பு சாத னம் -01 ஆகியன விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இத்தாக்குதல் சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற் படவில்லை - என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (சி)

---

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான படகுகள்.

இவற்றில் இரு றோலர் படகுகள் நீர் கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவரு டையன எனத் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணை களை சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

---

## கிழக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் உள்ளனர். அந்த மக்கள் தங்களுடைய ஜனநாயக உரிமை யைப் பயன்படுத்த முடி யாதநிலையில்உள்ளனர். இவ்வாறான நிலை யில் தேர்தல் நடத்துவது என்பது வேடிக்கை யான விடயம்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு உகந்த தரு ணம் இது அல்லவென தேர்தல் ஆணையா ளர் பகிரங்கமாகத் தெரியப்படுத்தியுள் ளார்.

தேர்தல் என் பது மக்களுடைய உண் மையான பிரதி நிதிகளை, மக்கள் விரும்பு கின்ற பிரதிநிதி களை ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்து எடுப்ப தற்கான விடயம். இந்நிலையில் இன்று மக்களின் உண்மையான பிரதிநிதிகளை - மக்கள்விரும்புகின்ற பிரதிநிதிகளைத் தெரிவு செய்வ தற்கு வாய்ப் பேயில்லை.

இவ்வாறான நிலை நிலவுகின்ற போது அரசு, தேர் தல் நடத்தப்படும் எனத் தெரிவிப்பது நகைப்புக்கிடமான ஒன்று - என்றார். (சி)

---

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் கலந்துகொண்டுவிட்டு ஓட்டோவில் அலுவலகத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்த 'தினக்குரல்' நாளிதழின் செய்தியாளர் கே.பி.மோகனே இந்த நெருக்கடிக்கு இலக்கானார்.

காலி முகத்திடலில் அவரும் 'சுடர் ஒளி' செய்தியாளரும் பயணம் செய்த ஓட்டோவை படையினர் மறித்தனர். ஆள் அடையாளத்தை நிரூபிக்க அடையாள அட்டையைக் காட்டுமாறு மோகனைப் படையினர் பணித்தனர். அவர் தம்வசம் இருந்த - தகவல் திணைக்களம் வழங்கிய - ஊடக அடையாள அட்டையைக் காட்டி னார்.

அதை ஏற்க மறுத்த ஜயதிலக என்ற பெயருடைய விமானப் படைச் சிப்பாய் ஒருவர், செய்தியாளரை மோசமான வார்த்தைகளால் ஏசித் தூஷித்தார் எனக் கூறப்படுகின்றது. இதனால் வாக்குவாதம் ஏற்பட்டது. தாம் நினைத்தால் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி சம்பந்தப் பட்டவர்களை ஏதும் செய்ய முடியும் என்றும் சம்பந்தப்பட்ட சிப்பாய் மிரட்டி யிருக்கின்றார்.

அச்சமயம் பின்னால் வேறு ஊடக நிறுவனங்களின் வாகனங்களும் வந்த நிலையில் - நீண்ட இழுபறிக்குப் பின்னர் - செய்தியாளர்களைத் தொடர்ந்து பயணிக்க, அந்தச் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்தபடையினர்அனுமதித்தனர்.

இச் சம்பவத்தின்போது, ஓட்டோவுக் குள் அமர்ந்திருந்த 'சுடர் ஒளி' செய்தியாளர் எந்தத் தொந்தரவுக்கும் ஆளாகவில்லை.

தகவல் திணைக்கள அடையாள அட் டையை ஏற்ப தற்கு படையினர் மறுத்து, மீண்டும் மீண்டும் இவ்வாறு ஊடகவிய லாளர்களுடன் கெடுபிடியாக நடந்துகொள் வது குறித்து தகவல் திணைக்களப் பணிப்பாளருக்கும், அரசுக்கும், ஊடக அமைப்புகளுக்கும் முறையீடு செய்யப்பட் டிருக்கின்றது. (சி)

---

## கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜகிரியவில் மீட்கப்பட்ட கிளைமோர் கண்ணி கொழும்பில் இந்த மாதம் கண்டு பிடிக்கப்பட்ட மூன்றாவது குண்டு என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

ஒபேசேகரபுர பகுதியில் வீடுகள், விடுதி கள், கடைகள், பொதுஇடங்கள் போன்றவற்றி லேயே தேடுதல் நடத்தப்பட்டது. (மற் றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்) (சி)

---

## பேச்சை மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இனப்பிரச்சினை விட யத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளில் ஒன்றின் மீது - பெரும்பாலும் இலங்கை அரசு மீது - கடும் அழுத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இணைத் தலைமைகள் முடிவு செய்த காரணத்தினாலேயே, அதைப் பகிரங்கப்படுத்தாமல் இருப்பதற்கு கூட் டறிக்கை தவிர்க்கப்பட்டிருக்கலாம் எனச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை அரசின் போக்கு தொடர் பாக காட்டமான நிலைப்பாட்டை இணைத் தலைமைகள் எடுக்குமானால் மேற்படி சந்திப்பின் பின்னர் கூட்டறிக்கை வெளியி டப்படமாட்டாது என்றும் -

அதற்குப் பதிலாக இணைத் தலைமை நாடுகள் இலங்கை தொடர்பான தங்களது கடும் நிலைப்பாட்டையும், தாங்கள் எடுக்கக் கூடிய அழுத்த நடவடிக்கைக ளையும் தனித்தனியாக இலங்கையுடன் தொடர்பு கொண்டு தெரிவிக்கக்கூடும் என்றும்-

நேற்று முன்தினம் இணைத்தலைமை நாடுகள் கூட்டம் நடைபெற முன்னரே செய்திகள் வெளியாகியிருந்தன.

அதை உறுதிப்படுத்துவது போல இம்முறை கூட்டறிக்கை தவிர்க்கப்பட்டிருக்கின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக் கியோ மாநாட்டின் இணைத் தலைமைக ளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நான்கினதும் பிரதிநிதிகள் நோர்வேயின் அழைப்பின் பேரில் ஒன்று கூடி இலங்கை நிலைமை குறித்து இக்கூட்டத்தில் ஆராய்ந்தனர்.

### பார்வையாளராக இந்தியா

இந்தியாவின் பிரதிநிதி பார்வையாளர் அந்தஸ் தில் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இலங்கையில் சட்டம் -ஒழுங்கு மற்றும் மனித உரிமைகள் பேணப்படும் விவகாரம் மோசமடைந்து வருகின்றது என்றும் - -

சமாதான முயற்சிகள் இடை நிறுத்தப் பட்டு, அரசியல் தீர்வுக்கான எத்தனங்கள் தடைப்பட்டுள்ளன என்றும் -

மனிதாபிமானப் பணிகள் தடைப்பட்டுள் ளன, யுத்த நிலைமை மோசமடைந்து வரு கின்றது என்றும் -

மேற்படி கூட்டத்தில் இணைத் தலைமை நாடுகள் கவலையுடன் குறிப்பிட்டு அது குறித்து தங்களின் கடும் அதிருப்தியை யும் வெளியிட் டன என்று சம்பந் தப்பட்டவட்டாரங்க ளில் இருந்து தெரிய வந்தது.

அமைதி முயற்சிகளை மீள ஆரம்பிக்கும் படி இரு தரப்புக்கும் கடும் அழுத்தம் கொடுக்கவும் -

நிலைமையைச்சீர்செய்வதற்கு விரைந்து அதிரடியாக - எடுக்கப்பட வேண்டிய நட வடிக்கைகள் குறித்தும் -

இணைத் தலை மைகளின் கூட்டத் தில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன என்றும் தெரியவந் தது.

நோர்வேயின் அனுசரணைப்பணிக்கு முழு ஒத்து ழைப்பும் ஆதர வும் வழங்கவும் அக்கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இணைத்தலைமைகள் எடுத்த முடிவு கள் மற்றும் அவற்றின் அடிப்படையி லான நடவடிக்கைகள் அடுத்து வரும் வாரங்களில் அம்பலமாகும் என்றும் விட யமறிந்தவட்டாரங்கள்தகவல்வெளியிட்டன.

### அடக்கி வாசிக்கப்பட்டது

ஒஸ்லோ மாநாடு குறித்த எதிர்பார்ப்பு கள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன.

இலங்கையில் தற்போது நிலவும் கஷ்ட மான - சீர் கெட்ட - நிலைமையினால் நாம் அடக்கி வாசிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம் என்று பெயர் குறிப்பிட விரும்பாத பேச்சுகளில் நெருங்கிய தொடர்பு டைய மேற்குலக ராஜதந்திரி ஒருவர் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு கூட்டத்தின் பின்னர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் நோர்வேயின் தரப் பில் அமைச்சர் எரிக் சொல்ஹெய் மும், ஜப்பானின் சார்பில் விசேட பிரதி நிதி யசூசி அகாசியும், அமெரிக்கா சார்பில் உதவி இரா ஜாங்க அமைச்சர் றிச்சார்ட் பவுச்சரும் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் அதன் பிரதிநிகளும் கலந்து கொண்டனர்.

இரண்டு தரப்புகளும் வன்முறையி னைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்குத் திரும்பு வதற்கு உதவும் வழிகள் குறித்து கூட்டத் தில் ஆராயப்பட்டதாக அமைச்சர் சொல் ஹெய்ம் தெரிவித்தார்.

அமெரிக்கஉதவி அமைச்சர்பௌச்சரும்-

இரண்டு தரப்புகளதும் மனித உரிமை களை மதிக்கவும், மனிதாபிமானப் பணி களை செய்வதற்கு உதவிட வும் முன்வர வேண்டும்.

மனிதாபிமான உதவிகளை வழங்கும் விடயத்தில் அவை உரியவர்களுக்குச் சென்றடைய வகை செய்யப்பட வேண் டும்- என்று சொன்னார். (அ-சி)

---

## இன்னும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிகளை செய்வதற்கு நாம் முயற்சித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மேற் குலக நாடுகள் உதவிகளை நிறுத்த முயற் சிப்பதானது துரதிஷ்டமாகும்.

கிழக்கு மாகாணத்தில் அமைதியை யும் அபிவிருத்தியையும் ஏற்படுத்த எமது அரசு நேர்மையாகவும் உண்மையாகவும் முயற்சி எடுத்துள்ளது. அமெரிக்கா இதில் திருப்தி அடையுமானால் எமக்கு நேரடி யாக உதவிகளை வழங்க வேண்டும்.

நாம் வெகுமதிகளிலும் தயாள குணங் களிலும் தங்கியிருக்க விரும்பவில்லை. எமது சொந்த ஆக்கத்திறமை, எமது தகுதி களில் நாங்கள் தங்கியிருக்க விரும்புகின் றோம். அமெரிக்காவிடமிருந்து கரிசனை, ஒத்துழைப்பு மற்றும் நல்லெண்ணம் ஆகி யவற்றையே நாம் எதிர்பார்க்கின்றோம் -என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார். (அ-ப)

---

## மரண அறிவித்தல்

**பழமொழிச் செல்வர் கனகரட்ணம் சத்தியானந்தசிவம் (J.P)**

**(சச்சி மாஸ்ரர், தலைவர்- கமநலசேவை நிலையம், நல்லூர், (முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)**



ஈச்சமோட்டையைச் சேர்ந்த கனகரட்ணம் சத்தியானந்தசிவம் 26.06.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் - செல்லமுத்து தம்பதி யரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்ற கனகத்தின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் ஏழாலை வடக்கு சிவகுரு தம்பதியரின் மருமகனும் சிவபாதசுந் தரம், பத்மலோசனா, ஜோதீஸ்வரி (சித்த வைத்திய பகுதி, யாழ்.மாநகர சபை) ஆகியோரின் சகோதரனும் நாரந்தனையைச் சேர்ந்த திருமகளின் மைத்துனரும் தவசீலன் (தவம் ஸ்ரோர்ஸ்), லயன் தவச்செல்வன் (பொறியியலாளர், செயலாளர், லயன்ஸ் கழகம், வடமராட்சி), தவநேசன் (ஆசிரியர், புனித சாள்ஸ் ம.வி.) ஆகியோரின் தந்தையும் மாலினி (சித்த வைத்தியர்), ராஜலக்சுமி (இலங்கை வங்கி, நெல்லியடி), ஜெயந்தி (ஆசிரியை, யாழ்.புனித ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் திருமதி சந்திரபாலு சுகிர்தா, சந்திரபாலு, சுகல்யா, பிரியங்கா, அமரீசன், ஆதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் அஸ்வினின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2007) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணிக்கு நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5429

தகவல்:
பிள்ளைகள்.

(சி/52768)

---

**நிரு ரியூசன் சென்ரர் கோண்டாவில்**

**2008**
தேசிய வருமானம்
வியா, வெள்ளி
(28.06.07)

**2009**
சந்தைப் பொருளாதாரம்
சனி, ஞாயிறு
ஆசிரியர்
சண் (30.07.2007)

---


**துரித தபால்கள், பொதிகள் சேவை**

உள்நாட்டு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள்
உணவுப் பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள்,
உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள்,
CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 222 7835 (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்னால்)

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொலைபேசி - 021 222 7310 (நல்லூர்ப.நோ.கூ.சங்கம் முன்னால்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.06.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org